விலை: 50.00
பக்கங்கள் - 16
Website : www.valampurii.lk
Viber : 076 636 3378
Registered as a News Paper in Sri Lanka

# வலம்புரி
Valampurii

E-mail: valampurii@yahoo.com
சங்கு 26
ஒலி 156 வள்ளுவர் ஆண்டு 2056 வைகாசி 10 சனிக்கிழமை (24.05.2025) தொலைபேசி 222 3378, பக்ஸ் 222 7829




### கடுமையான எதிர்ப்பையடுத்து

## அசைவ உணவகம் தற்போது சைவ உணவகமாக மாற்றம்

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாணம் நல்லூர் ஆலயச் சூழலில் புதிதாகத் திறக்கப்பட்ட அசைவ உணவகம் தற்போது சைவ உணவகமாக மாற்றப்பட்டுள்ளது.

அந்தவகையில் அங்கு சைவ உணவுகள் பரிமாறப்படுவதாகத் தெரிவிக்கப்படுகின்றது.

குறித்த உணவகத்தில் 15ஆம் பக்கம் பார்க்க



### கோவில் ஆன்மீகத் தலமா? வியாபார நிலையமா?

## புங்குடுதீவு கண்ணகி அம்மன் ஆலய நிர்வாகத்துக்கு எதிராகப் போராட்டம்



(யாழ்ப்பாணம்)

புங்குடுதீவு கண்ணகி அம்மன் ஆலய நிர்வாக சபையினருக்கு எதிராக நேற்றுக் கவனயீர்ப்பு போராட்டம் ஒன்று முன்னெடுக்கப்பட்டது.

15ஆம் பக்கம் பார்க்க


# வடக்கு, கிழக்கு காணிகள் மக்களிடம் கையளிக்கப்படும்

## கையகப்படுத்தும் எண்ணம் அரசுக்கு இல்லை தமிழ் எம்.பிக்களிடம் பிரதமர் ஹரிணி



(கொழும்பு)

வடக்கு, கிழக்கு மக்களின் காணிகளை கையகப்படுத்தும் எந்த எண்ணமும் அரசாங்கத்திற்கு இல்லை என்றும், காணிகளின் உரிமைகளைக் கொண்டுள்ள மக்களுக்கு உடனடியாகக் காணிகளை கையளிப்பதே அரசாங்கத்தின் நோக்கமாகும் என்றும் பிரதமர் கலாநிதி ஹரிணி அமரசூரிய தெரிவித்தார். (15ஆம் பக்கம் பார்க்க)





### சங்கானையில்

## குடும்பஸ்தர் சடலமாக மீட்பு

(யாழ்ப்பாணம்)

சங்கானையில் குடும்பஸ்தர் ஒருவர் நேற்று சடலமாக மீட்கப்பட்டுள்ளார்.

இதில் சங்கானை வைத்தியசாலை வீதியைச் சேர்ந்த ஐயாத்துரை கிருஸ்ணமூர்த்தி 15ஆம் பக்கம் பார்க்க

## பசிலுக்கு எதிராக காணி வழக்கு

(கொழும்பு)

முன்னாள் அமைச்சர் பசில் ராஜபக்ஷவுக்கு எதிரான வழக்கு விசாரணையை எதிர்வரும் நவம்பர் 21ஆம் 02ஆம் பக்கம் பார்க்க

## போதை மாத்திரைகளுடன் யாழில் இருவர் கைது



15ஆம் பக்கம் பார்க்க

## இனப் படுகொலையை அங்கீகரிக்க அநுர அரசுக்கு முதுகெலும்பு இல்லை

### சபையில் கஜேந்திரகுமார் எம்.பி

(கொழும்பு)

இனப்படுகொலையை அங்கீகரிப்பதற்கு இலங்கை அரசாங்கத்திற்கு முதுகெலும்பு இல்லை என பாராளுமன்ற உறுப்பினர் கஜேந்திரகுமார் தெரிவித்துள்ளார்.

பாராளுமன்றத்தில் நேற்று உரையாற்றுகையிலேயே அவர் இவ்வாறு குறிப்பிட்டுள்ளார்.

அவர் மேலும் கூறுகையில், "இந்த நாட்டின் அரசாங்கத் 15ஆம் பக்கம் பார்க்க



## வவுனியாவில் 10 ஆயிரம் ஏக்கர் காணி வனப் பகுதியாக பிரகடனப்படுத்தப்பட்டுள்ளதா?

### பிரதமருடனான சந்திப்பில் சத்தியலிங்கம் கேள்வி

(கொழும்பு)

எதிர்வரும் ஜூன் மாதம் 5ம் திகதி அனுஷ்டிக்கப்படவுள்ள சர்வதேச சுற்றாடல் தினத்தை முன்னிட்டு வவுனியா வடக்கு பிரதேச செயலக பிரிவில் 10 ஆயிரம் ஏக்கர் காணி வனப்பகுதியாகப் பிரகடனப்படுத்தப்படவுள்ளதா? என இலங்கைத் தமிழ் அரசுக் கட்சியின் வன்னி மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர் ப.சத்தியலிங்கம் கேள்வி எழுப்பியுள்ளார்.

வடக்கு - கிழக்கு காணி பிணக்குகள் தொடர்பான கூட்டமொன்று பிரதமர் ஹரிணி 02ஆம் பக்கம் பார்க்க

## மின்சாரம் தாக்கியதில் குடும்பஸ்தர் மரணம்

### சுன்னாகத்தில் சம்பவம்

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாணம் சுன்னாகத்தில் மின்சாரம் தாக்கியதில் குடும்பஸ்தர் ஒருவர் உயிரிழந்துள்ளார்.

சுன்னாகம்பழைய பொலிஸ் நிலையத்துக்கு அருகில் நேற்று முன்தினம் மாலை இச்சம்பவம் இடம்பெற்றுள்ளது.

இதில் சுன்னாகம் தெற்கு 02ஆம் பக்கம் பார்க்க



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## வவுனியாவில்...

அமரசூரிய தலைமையில் நேற்று பாராளுமன்ற கட்டிடத் தொகுதியில் நடைபெற்றது. அங்கு உரையாற்றும் போதே இவ்வாறு கேள்வி எழுப்பினார். அவர் தொடர்ந்து தெரிவிக்கையில்,

சர்வதேச சுற்றாடல் தினத்தை முன்னிட்டு ஜனாதிபதி அவர்களால் வவுனியா மாவட்டத்தில் உள்ள வனப் பிரதேசத்தை பாதுகாப்பதற்காக அவ் வனத்தை வர்த்தமானி அறிவித்தல் மூலம் பிரகடனப்படுத்தப்படவுள்ள தாக அறிய முடிகின்றது. இதற்காக வடக்கு மாகாணத்தில் வவுனியா மாவட்டத்தில் வவுனியா வடக்கு பிரதேச செயலக பிரிவில் 10 ஆயிரம் ஏக்கர் காணி வனப்பகுதியாக பிரகடனப்படுத் தப்படவுள்ளதாக அறிகின்றோம்.

ஏற்கனவே வெளியிடப்பட்ட வர்த்த மானி அறிவித்தல்களில் பெருமள விலான பொதுமக்களிற்கு சொந்தமான காணிகள் உள்வாங்கப்பட்டிருந்தது. அவை இடப்பெயர்வுக்கு முன்பு மக் கள் குடியிருந்த மற்றும் அவர்களது பயன்பாட்டில் இருந்த காணிகளாகும். எனவே வர்த்தமானி மூலம் பிரகடனப் படுத்துவதற்கு முன்னர் பொதுமக்க ளின் பாவனையிலிருந்த காணிகளை அடையாளங்கண்டு அவற்றினை முற்றாக விடுவிப்பதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று கோரிக்கை முன் வைத்தார். (ம-4,7,250)

## பசிலுக்கு...

திகதிக்கு ஒத்திவைப்பதாக மாத்தறை பிரதான நீதவான் அருண புத்ததாச உத்தரவிட்டார்.

மாத்தறை - ப்ரவுன்சில் பகுதியில் 1.5 ஏக்கர் நிலத்தை 50 மில்லியன் ரூபாய்க்குக் கொள்வனவு செய்தமை தொடர்பான வழக்கே இன்று(நேற்று) ஒத்தி வைக்கப்பட்டது.

இதன்போது பசில் ராஜபக்ஷ சுக வீனமுற்று வெளிநாட்டில் இருப்பதாக அவரது சட்டத்தரணிகள் நீதிமன் றத்திற்குத் தெரிவித்திருந்தனர்.

பசில் ராஜபக்ஷவின் மனைவியின் சகோதரியான புண்ய காந்தி என்ப வரின் பெயரில், இந்தக் காணி 50 மில்லியன் ரூபாய்க்குக் கொள்வனவு செய்யப்பட்டுள்ளது.

இந்த விடயம் தொடர்பில் 2017 ஆம் ஆண்டு நிதி குற்றப்புலனாய்வு பிரிவு அதிகாரிகளால் வழக்கொன்று தாக்கல் செய்யப்பட்டமை குறிப்பிடத் தக்கது. (ம-4,7)

## மின்சாரம் ...

மின்சார நிலைய வீதியினைச் சேர்ந்த இராசமணி ஸ்ரீகாந்தன்(வயது 48) என்ற மூன்று பிள்ளைகளின் தந்தையே மரணமடைந்தவராவார்.

இவர் நேற்று முன்தினம்(22) மாலை வேளையில் பழைய பொலிஸ் நிலைய வீதி, சுன்னாகம் பகுதியிலுள்ள வீடொன்றில், வீதியோரமாக இருந்த பூவரசு மரமொன்றின் மீது ஏறி கதியால் வெட் டும் போது தடி சரிந்து மின் கம்பியின் மீது தொடுகையுற்றதன் காரணமாக மின்சாரம் தாக்கி சம்பவ இடத்தி லேயே உயிரிழந்துள்ளார்.

மரண விசாரணைகளை திடீர் மரண விசாரணை அதிகாரி ஆ. ஜெய பாலசிங்கம் மேற்கொண்டார்.

இலங்கை மின்சார சபையின் சுன் னாகம் பிரதேச பிரிவில் குறித்த இடத் தில் 3 பேஸ் மின் கம்பிகளுக்கிடையே தொடர்ச்சியாக மரக்கிளைகள் வளர் ந்து காணப்படுகின்றமை குறிப்பிடத் தக்கது. (ம-4,7,104)

# நான் எவராலும் கடத்தப்படவில்லை என் விருப்பின் பேரிலேயே சென்றேன்

### யாழில் கடத்தப்பட்ட பெண் பரபரப்பு வாக்குமூலம்


(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாணம் மல்லாகம் நீதவான் நீதிமன்றில் வழக்கொன்றுக்காகச் சென்று திரும்பிக் கொண்டிருந்த தம்பதியினர் வழிமறிக்கப்பட்டு கண வன் மீது கொடூரத்தாக்குதல் மேற் கொள்ளப்பட்டு மனைவி கடத் தப் பட்டிருந்தார்.

இந்நிலையில் இது குறித்து கிடைக் கப்பெற்ற முறைப்பாடுகளுக்கமைய தெல்லிப்பழைப் பொலிஸாரால் இரு விசாரணைக் குழுக்கள் அமைக்கப் பட்டு தீவிர தேடுதல் நடவடிக்கைகள் முன்னெடுக்கப்பட்டது.

அதன் பயனாக யுவதி கண்டுபிடிக் கப்பட்ட நிலையில் தான் எவராலும் கடத்தப்படவில்லை எனவும் எனது சொந்த விருப்பின் பேரிலேயே சகோ தரர்களுடன் சென்று தற்போது பெற் றோரின் அரவணைப்பில் உள்ள தாகவும் அடுத்த தவணைக்கு மன்றில் நிச்சயம் ஆஜராகுவேன் என்றும் வாக்கு மூலம் வழங்கியுள்ளதாக பொலிஸார் தெரிவித்தனர். (ம-4,7)

# சன்ரைசர்ஸ் வெற்றி



பெங்களூருக்கு எதிரான போட்டியில் சன்ரைசர்ஸ் 42 ஓட்டங்களால் வெற்றி பெற்றது.

முதலில் துடுப்பெடுத்தாடிய சன்ரைச ர்ஸ் 20 ஓவர்கள் முடிவில் 6 விக்கெட்டு இழப்பிற்கு 231 ஓட்டங்கள் பெற்றது. வெற்றி இலக்கை நோக்கி துடுப்பெடுத் தாடிய பெங்களூரு 19.5 ஓவர்களில் 189 ஓட்டங்கள் குவித்து ஆலஅவுட் ஆனது.

94 ஓட்டங்கள் குவித்த இஷான் கிஷான் ஆட்டநாயகனாக தெரிவானார். (ம-4)

கவர்ச்சிகரமான சம்பளத்துடன் கூடிய

**வேலைவாய்ப்பு**

மா, தூள் அரைத்தல், மா வறுத்தல் பெண் வேலையாட்கள் தேவை

சம்பளம் : 1500/= - 2500/= வரை

(1164)

**077 936 1356**

# மரண அறிவித்தல்



மலர்வு 09.08.1989

உதிர்வு 22.05.2025

## திரு.விக்னேஸ்வரன் விஷாந்

### (கணனிப் பொறியியலாளர்)

38/16, சொர்ணவடலி ஒழுங்கை கொக்குவில் மேற்கு கொக்குவிலை வசிப்பிடமாகக் கொண்ட திரு.விக்னேஸ்வரன் விஷாந் அவர்கள் 22.05.2025 வியாழக்கிழமை அன்று இறைவனடி சேர்ந்தார்.

அன்னார் விக்னேஸ்வரன் - ஞானகௌரி தம்பதியரின் அருமை மகனும் உடுப்பிட்டியைச் சேர்ந்த திரு. பொன்னம்பலம் நடராசா, திருமதி நடராசா சின்னம்மா மற்றும் நயினாதீவு திரு. வைத்திலிங்கம் கதிரேசு, திருமதி கற்பகம் கதிரேசு தம்பதியினரின் அன்புப் பேரனும் திரு. நடராசா லோகேஸ்வரன், திருமதி யாழினி லோகேஸ்வரன் (லண்டன்) ஆகியோரின் பெறாமகனும் திரு. திருமதி முராரி முகுந்தன் லோகேஸ்வரி(அவுஸ்திரேலியா), திரு. திருமதி தேவதாஸ் தேவயானி (மலேசியா) தம்பதியினரின் ஆசை மருமகனும் மற்றும் திரு.திருமதி மனோகரன் ஜெயகௌரி (யாழ்.), திரு. திருமதி விஜயராஜன் ரஞ்சிதகௌரி(கனடா), திரு. திருமதி வசந்தகௌரி நித்யதர்மகுமார்(லண்டன்), திரு. திருமதி ஜெயராஜ் ஜெயந்தி (சுவிஸ்), திரு.திருமதி பாலரூபன் யாழினி(கனடா), திரு.திருமதி லிங்கராஜன் யாமினி(லண்டன்) தம்பதியினரின் பெறாமகனும் திரு.திருமதி ரவீந்திரன் - சசிதா (மொன்றியல்) தம்பதியினரின் ஆசை மருமகனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை 25.05.2025 ஞாயிற்றுக் கிழமை அன்னாரின் இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும்.

இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளுமாறு கேட்டுக்கொள்கின்றோம்.

38/16, சொர்ணவடலி ஒழுங்கை, கொக்குவில்.

தகவல் : குடும்பத்தினர்

(4368)

Digitized by Noolaham Foundation. noolaham.org | aavanaham.org



# SLTC இப்போது யாழ் மண்ணில்

## எதிர்கால கனவு என்ன என்ற சிந்தனையா?

உங்கள் கனவை நனவாக்கிடும் பாதைகளை அறிந்திட எம்மை நாடுங்கள்!

EDUEXPO JAFFNA 2025

திகதி: 2025 மே 24 மற்றும் 25 ஆம் திகதி

கலாச்சார மையம், யாழ்ப்பாணம்

SLTC இன் பலதரப்பட்ட பட்டப்படிப்புகளில் உங்கள் கற்கைநெறி குறித்து அறிந்து கொள்ளுங்கள்

**பொறியியல் | விஞ்ஞானம் | வணிகம் | தொழில்நுட்பம் | கணினி மற்றும் தகவல் தொழில்நுட்பம்**

உங்களுக்காக ஒரு பரிசு! SLTC இன் இலவச பரிசை பெற்றிட இந்த கூப்பனை நிரப்பி எம்மிடம் கொண்டு வாருங்கள்!

கல்விக்கண்காட்சியில் இக்கூப்பனை எமது குழுவினரிடம் காண்பித்து உங்கள் பரிசை பெற்றிடுங்கள்.

பெயர்:.......................................................................

தொடர்பு இலக்கம்:.......................................................

மேலதிக தகவல்களுக்கு: அழைப்பு 0117 999 000 | வலைத்தளம் www.sltc.ac.lk | SLTC Residential Campus, Ingiriya Road, Padukka

Approved by the MINISTRY OF EDUCATION

Recognized by the UNIVERSITY GRANTS COMMISSION

Member of The Association of Commonwealth Universities

Member of SLANSHEI Sri Lanka Association of Non-State Higher Education Institutes

SLTC A Research University

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




# மிட்செல் மார்ஷ் 'மின்னல் சதம்' லக்னோவிடம் வீழ்ந்தது குஜராத்




ஐ.பி.எல் 18 ஆவது அத்தியாயத்தில் அணிகள் நிலையில் 18 புள்ளிகளுடன் முதலாம் இடத்திலுள்ள குஜராத் டைட்டன்ஸை அஹமதாபாத் நரேந்திரமோடி விளையாட்டரங்கில் நேற்று முன்தினம் வியாழக்கிழமை இரவு எதிர்த்தாடிய லக்னோவ் சுப்பர் கிங்ஸ் 33 ஓட்டங்களால் அபார வெற்றியீட்டியது.

ஏற்கனவே பிளேஆஃப் வாய்ப்பை இழந்திருந்த லக்னோவ் சுப்பர் ஜெயன்ட்ஸ்க்கு இது ஆறுதல் தரும் வெற்றியாகவே அமைந்தது.

அதேவேளை பிளேஆஃப் சுற்றில் விளையாடத் தகுதிபெற்றிருந்த குஜராத் டைட்டன்ஸ்'க்கு இந்தத் தோல்வி பெரும் ஏமாற்றத்தைக் கொடுத்ததுடன் நெருக்கடியையும் தோற்றுவித்துள்ளது.

இந்தப் போட்டியில் முதலில் துடுப்பெடுத்தாட அழைக்கப்பட்ட லக்னோவ் அணி 20 ஓவர்களில் 2 விக்கெட்களை மாத்திரம் இழந்து 235 ஓட்டங்களைக் குவித்தது.

லக்னோவின் முன்வரிசை வீரர்கள் மூவரும் அதிரடியாகத் துடுப்பெடுத்தாடி ஓட்டங்களைக் குவித்தனர்.

ஏய்டன் மார்க்ராம், மிட்செல் மார்ஷ் ஆகிய இருவரும் 59 பந்துகளில் 91 ஓட்டங்களைப் பகிர்ந்து சிறப்பான ஆரம்பத்தை இட்டுக் கொடுத்தனர். மார்க்ராம் 36 ஓட்டங்களைப் பெற்று ஆட்டம் இழந்தார்.

பத்து ஓவர்கள் நிறைவில் லக்னோவ் அணி ஒரு விக்கெட்டை இழந்து 97 ஓட்டங்களைப் பெற்றிருந்தது. ஆனால் அடுத்த பத்து ஓவர்களில் 138 ஓட்டங்கள் குவிக்கப்பட்டது.

மிட்செல் மார்ஷ், நிக்கலஸ் பூரன் ஆகிய இருவரும் 2ஆவது விக்கெட்டில் 51 பந்துகளில் 121 ஓட்டங்களைப் பகிர்ந்து அணியைப் பலமான நிலையில் இட்டனர்.

அதிரடி ஆட்டத்தை வெளிப்படுத்திய மிச்செல் மார்ஷ் 64 பந்துகளில் 10 பவுண்டறிகள், 8 சிக்ஸ்களுடன் 117 ஓட்டங்களை விளாசினார்.

நிக்கலஸ் பூரண் 27 பந்துகளில் 4 பவுண்டறிகள், 5 சிக்ஸ்கள் உட்பட 56 ஓட்டங்களுடனும் அணித் தலைவர் ரிஷப் பண்ட் 6 பந்துகளில் 2 சிக்ஸ்கள் உட்பட 16 ஓட்டங்களுடனும் ஆட்டம் இழக்காதிருந்தனர்.

236 ஓட்டங்கள் என்ற கடினமான வெற்றி இலக்கை நோக்கி பதிலுக்குத் துடுப்பெடுத்தாடிய குஜராத் டைட்டன்ஸ் 20 ஓவர்களில் 9 விக்கெட்களை இழந்து 203 ஓட்டங்களைப் பெற்று தோல்வி அடைந்தது.

சாய் சுதர்சனும் அணித் தலைவர் ஷுப்மன் கில்லும் 27 பந்துகளில் 46 ஓட்டங்களைப் பகிர்ந்தனர்.

சாய் சுதர்சன் கவனக்குறைவான அடி தெரிவினால் 35 ஓட்டங்களைப் பெற்று ஆட்டம் இழந்தார்.

மொத்த எண்ணிக்கை 85 ஓட்டங்களாக இருந்தபோது ஷுப்மன்கில் 7 பவுண்டறிகளுடன் 35 ஓட்டங்களைப் பெற்று களம் விட்டகன்றார்.

மறு பக்கத்தில் அதிரடியாகத் துடுப்பாட்டத்தை ஆரம்பித்த ஜொஸ் பட்லர் 18 பந்துகளில் 33 ஓட்டங்களுடன் ஆட்டம் இழந்ததும் குஜராத் டைட்டன்ஸ் நெருக்கடிக்குள்ளானது.

ஆனால், ஷேர்ஃபேன் ரதர்ஃபர்ட், ஷாருக்கான் ஆகிய இருவரும் 4ஆவது விக்கெட்டில் 86 ஓட்டங்களைப் பகிர்ந்து அணிக்கு சற்று உற்சாகத்தைக் கொடுத்தனர்.

ஷேர்ஃபேன் ரதர்ஃபர்ட் 22 பந்துகளில் 38 ஓட்டங்களைப் பெற்று ஆட்டம் இழந்தார்.

அவரது விக்கெட் உட்பட 6 விக்கெட்கள் 20 ஓட்டங்கள் வித்தியாசத்தில் சரிந்ததுடன் குஜராத் டைட்டன்ஸ் தோல்வியைத் தழுவியது.

பந்துவீச்சில் வில் ஓ'ரூர்க் 27 ஓட்டங்களுக்கு 3 விக்கெட்களையும் அயுஷ் படோனி 4 ஓட்டங்களுக்கு 2 விக்கெட்களையும் ஆவேஷ் கான் 51 ஓட்டங்களுக்கு 2 விக்கெட்களையும் கைப்பற்றினர்.

போட்டியின் ஆட்ட நாயகனாக மிச்செல் மார்ஷ் தெரிவானார். (நி-3)

## ஐரோப்பியக் கால்பந்தாட்டம்

# 41 வருடங்களின் பின் சம்பியனை கைப்பற்றியது இங்கிலாந்து

ஐக்கிய ஐரோப்பிய கால்பந்தாட்ட சங்கத்தினால் நடத்தப்பட்டு வந்த இந்த வருடத்திற்கான ஐரோப்பா லீக் கால்பந்தாட்ட சம்பியன் பட்டத்தை இங்கிலாந்தின் பிரபல கழகங்களில் ஒன்றான டொட்டன் ஹாம் ஹொட்ஸ்பர் சூடிக்கொண்டது.

ஸ்பெய்னில் அமைந்துள்ள பில்பாஓ சான் மேம்ஸ் விளையாட்டரங்கில் கடந்த புதன்கிழமை இரவு இங்கிலாந்தின் இரண்டு அணிகள் மோதிக்கொண்ட, மிகவும் பரபரப்பான இறுதிப் போட்டியில் மென்செஸ்டர் யுனைட்டட் கழகத்தை 1 - 0 என்ற கோல் வித்தியாசத்தில் டொட்டன் ஹாம் ஹொட்ஸ்பர் வெற்றிகொண்டு ஐரோப்பா லீக் சம்பியன் பட்டத்தை கைப்பற்றியது.

இங்கிலாந்தின் பிரபல கழகங்களில் ஒன்றான டொட்டன்ஹாம் ஹொட்ஸ்பர் கழகம், பிரதான கால்பந்தாட்ட வெற்றிக் கிண்ணம் ஒன்றை 17 வருடங்களின் பின்னர் சுவீகரித்துள்ளது.

ஆனால், ஐரோப்பா லீக் கிண்ணத்தை 41 வருடங்களின் பின்னரே டொட்டன்ஹாம் ஹொட் ஸ்பர் கழகம் கைப்பற்றியுள்ளது.

தென்கொரிய வீரர் சொன் ஹியங்மின் என்பவரை தலைவராகக் கொண்ட டொட்டன்ஹாம் ஹொட்ஸ்பர் அணி போட்டியின் 42ஆவது நிமிடத்தில் ப்ரெனான் ஜோன்சன் போட்ட கோல் மூலம் வெற்றிபெற்று சம்பியனானது.




இறுதிப் போட்டிக்கு முன்பதாக நடைபெற்ற இரண்டு கட்டங்களைக் கொண்ட அரை இறுதிப் போட்டிகளில் 7 - 0 என்ற ஒட்டுமொத்த கோல்கள் வித்தியாசத்தில் அத்லெட்டிக் கழகத்தை டொட்டன்ஹாம் ஹொட்ஸ்பர் வெற்றிகொண்டு இறுதிப் போட்டிக்கு முன்னேறியிருந்தது.

மற்றைய அரை இறுதிப் போட்டியில் போர்த்துக்கல்லின் எவ்.சி. போர்ட்டோ அணியை 5 - 0 என்ற ஒட்டுமொத்த கோல்கள் வித்தியாசத்தில் மென்செஸ்டர் யுனைட்டட் வெற்றி கொண்டு இறுதிப் போட்டியில் விளையாடத் தகுதி பெற்றிருந்தது.

1971 நடைபெற்ற அங்குராரப்பண ஐக்கிய ஐரோப்பிய கால்பந்தாட்ட சங்கக் கிண்ண போட்டியில் சம்பியனான டொட்டன் ஹாம் ஹொட்ஸ்பர் கழகம் 1984 ஆம் ஆண்டு மீண்டும் சம்பயினாகி இருந்தது. பின் இந்த வருடம் 41 ஆண்டுகளின் பின்னர் சம்பியனைக் கைப்பற்றியது. (நி-3)




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



யாழ் வீரசிங்கம் மண்டபத்தில் கடந்த 21.05.2025ஆம் ஆண்டு ஆரம்பமான யாழ்ப்பாணம் சர்வதேச புத்தகக் கண்காட்சி மிகச்சிறப்பாக நடைபெற்று வருகிறது. அனைத்து தரப்பினருக்கும் ஏற்ற பல்வகை நூல்கள், குறிப்பாக மருத்துவம், பொருளாதாரம், பொறியியல், வணிகம், கணிதம், கலை, இலக்கியம், ஆன்மிகம், தத்துவம், நாவல்கள், தகவல் தொழில்நுட்பம் முதலானவைகள் உள்ளிட்ட கிடைத்தற்கரிய பல்லாயிரக்கணக்கான நூல்களை சிறந்த விலைக்கழிவு விலைப்பெறுமதியில் பெற்றுக்கொள்ள முடியும் என ஏற்பாட்டாளர்கள் தெரிவிக்கின்றனர்.

# 3,147 பேருக்கு தாதியர் நியமனங்கள் சுகாதார அமைச்சு அறிவிப்பு

(கொழும்பு)

இலங்கையின் தாதியர் சேவையில் புதிதாக சேர்க்கப்பட்ட 3,147 பேருக்கு நியமனக் கடிதங்கள் அதிகார பூர்வமாக வழங்கப்படும் என்று சுகாதார மற்றும் ஊடக அமைச்சு அறிவித்துள்ளது.

அலரி மாளிகையில் வைத்து இன்று குறித்த நியமனக் கடிதங்கள் வழங்கி வைக்கப்படும் என தெரிவிக்கப்பட்டுள்ளது.

இதன்போது தாதியர் சேவைக்காக ஆட்சேர்ப்பு செய்யப்பட்டுள்ள 3,147 தாதியர்களுக்கான நியமனக் கடிதங்கள் வழங்கப்படவுள்ளன.

அத்துடன் தாதியர் சேவையில் 79 விசேட தர உத்தியோகத்தர்களுக்கு பதவி உயர்வு வழங்கப்படவுள்ளதாகவும் குறிப்பிடப்பட்டுள்ளது. (நி)

# அமைச்சரவையில் மாற்றம் புதியவர்களுக்கு வாய்ப்பு

(கொழும்பு)

அமைச்சரவையில் மாற்றம் செய்வது குறித்து அரசாங்கம் கவனம் செலுத்தி வருவதாகத் தெரிவிக்கப்படுகின்றது.

அரச தொலைக்காட்சி ஒன்றுக்கு அளித்த நேர்காணலின் போதே ஆளும் கட்சியின் பிரதம அமைப்பாளரும் போக்குவரத்து அமைச்சருமான பிமல் ரட்நாயக்க இந்த விடயத்தை தெரிவித்துள்ளார்.

தற்போதைய அமைச்சரவையில் அங்கம் வகிக்கும் தாம் உள்ளிட்ட அமைச்சர்களின் பொறுப்புக்களை மாற்றியமைக்குமாறு கோரிக்கை விடுப்பதாகத் தெரிவித்துள்ளார்.

சில வேளைகளில் புதியவர்கள் அமைச்சர்களாக நியமிக்கப்படலாம் என அவர் தெரிவித்துள்ளார். (நி)


# ஜனாதிபதி ஜேர்மன் பயணம்

(கொழும்பு)

ஜனாதிபதி அநுரகுமார திஸாநாயக்கவின் அடுத்த வெளிநாட்டு பயணம் குறித்து வெளியுறவு அமைச்சர் விஜித ஹேரத் அறிவிப்பொன்றை வெளியிட்டுள்ளார்.

அதன்படி, ஜனாதிபதி எதிர் வரும் ஜூன் 10 ஆம் திகதி ஜேர்மனிக்கு விஜயம் செய்யவுள்ளதாக தெரிவிக்கப்படுகின்றது.

ஜேர்மனிப் பயணம் ஜனாதிபதியின் முதல் ஐரோப்பிய பயணமாக திட்டமிடப்பட்டுள்ளது.



ஜனாதிபதி தனது முதல் வெளிநாட்டுப் பயணமாக இந்தியாவிற்கும், பின்னர் சீனாவிற்கும், பின்னர் ஐக்கிய அரபு எமிரேட்ஸுக்கும் விஜயம் செய்தமை குறிப்பிடத்தக்கது. (நி)



யாழ்ப்பாணம்-இருபாலை கற்பகப் பிள்ளையார் ஆலயத் தேர்த்திருவிழா நேற்று வெள்ளிக்கிழமை பக்திபூர்வமாக இடம்பெற்றது. (படம்: சிவசாந்தன்)

# இராசிபலன்

24.05.2025
வைகாசி 10, சனிக்கிழமை
துவாதசி பிற்பகல் 4.30 மணிவரை.

ரேவதி முற்பகல் 10.59 மணிவரை
சுபநேரம் 2.52-4.22 மணிவரை
இராகுகாலம் 8.52-10.22மணிவரை
சனிப்பிரதோச விரதம்

சந்திராஷ்டமம்-
உத்தரம், அத்தம்

வளவன்


மேஷம்

எதிர்பார்க்காமல் செய்த வேலையொன்றில் கணிசமான ஆதாயம் கிடைக்கும், வழிபாட்டால் திருப்தி காண வேண்டிய நாள், கற்பனை மிகுதியான நாள்.


ரிஷபம்

ஒரு வேலையை முடிக்க ஒரு முறைக்கு இரு முறை அலைய நேரிடலாம், சுப விரயங்கள் அதிகரிக்கும் நாள்; பயணங்களால் பலனுண்டு.


மிதுனம்

எண்ணிய காரியங்கள் உடனுக்குடன் நிறைவேறும், வெளியூர்த் தொடர்புகள் அனுகூலம் தரும், குடும்பத்தில் மகிழ்ச்சி தரும் சம்பவங்கள் இடம் பெறலாம்.


கடகம்

உதவிகள் கூடும், நண்பர்கள் வலிய வந்து உதவுவார்கள், தொட்ட காரியங்களில் வெற்றி பெறும் நாள், குடும்ப மகிழ்ச்சி கூடும், பொது வாழ்வில் கௌரவம் அந்தஸ்து உயரும்.


சிம்மம்

எதிர்ப்பாக இருந்தவர்கள் மனம் மாறுவார், வீட்டை சீரமைப்பதில் ஆர்வம் கூடும், ஆரோக்கியத்தில் தெளிவு பிறக்கும், எதிர்கால நலனில் அக்கறை கூடும்.


கன்னி

வாகன பழுதுச் செலவுகள் ஏற்படலாம், பயணங்களின் போது பொருட்களில் கவனம் தேவை, குடும்பத்தினரிடையே கோபமாகப் பேசிவிட்டு பின்னர் மனம் வருந்தும் நிலை ஏற்படலாம்.


துலாம்

உறவினர்களின் சந்திப்பால் குடும்பத்தில் கலகலப்பான சூழ்நிலை உருவாகும், கடமையில் கண்ணும் கருத்துமாக இருப்பீர்கள், பயணங்களால் பலனுண்டு.


விருச்சிகம்

விரதம் வழிபாடுகளில் நம்பிக்கை கூடும், எண்ணங்கள் எளிதில் கைகூடும், பொது வாழ்வில் சுவாரஸ்யம் தரும் சம்பவங்கள் இடம்பெறலாம், பயணங்கள் கைகூடும்.


தனுசு

கேளிக்கை கொண்டாட்டங்களில் கலந்து மகிழும் வாய்ப்பு உண்டு, நெடுநாளைய கனவுகள் நனவாகலாம், புண்ணிய காரியங்களில் ஆர்வம் காட்டுவீர்கள்.


மகரம்

பொது வாழ்வில் மதிப்பும் மரியாதையும் உயரும், வெளியூர்த் தொடர்புகள் அனுகூலம் தரும், பெற்றோர் நலனில் அதிக அக்கறை காட்டுவீர்கள், போசன சுகமுண்டு.


கும்பம்

எதிர்ப்பாக இருந்தவர்கள் மனம் மாறுவார், நீண்ட நாளைய விருப்பமொன்று நிறைவேறும் வாய்ப்புண்டு, குடும்பப் பொறுப்புகள் கூடும், முயற்சிகள் கைகூடும்.



மீனம்

தொழிலை விரிவுபடுத்தும் எண்ணம் உருவாகும், பணவரவு திருப்தி தரும், இறைவழிபாட்டுச் சிந்தனை மேலோங்கும், சுபகாரியப் பேச்சுக்களில் முன்னேற்றம் காண்பீர்கள்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# "விருத்தப் பாமழை ஆயிரம்" கவிதை நூல் வெளியீடு



(யாழ்ப்பாணம்)

அமலமரித் தியாகிகள் சபையைச் சேர்ந்த அருட் பணியாளர் செ.அன்புராசா அடிகளாரின் "விருத்தப் பாமழை ஆயிரம்" என்ற கவிதை நூலின் வெளியீடு நாளை ஞாயிற்றுக்கிழமை பி.ப. 3.30 மணிக்கு இல. 286, பிரதான வீதி, யாழ்ப்பாணத்தில் அமைந்துள்ள கலைத்தூது கலையகத்தில் இடம்பெறவுள்ளது.

கோப்பாய் ஆசிரியர் பயிற்சிக் கலாசாலையின் அதிபர் செந்தமிழ்ச் சொல்லருவி சந்திர மௌலீசன் லலீசன் தலைமையில் நடைபெறவுள்ள இந் நிகழ்வில் முதன்மை விருந்தினராக யாழ். பல்கலைக்கழக ஓய்வுநிலைப் பேராசிரியர் சி. சிவலிங்கராஜா, சிறப்பு விருந்தினராக கவிஞர் சோ.பத்மநாதன் ,கௌரவ விருந்தினர்களாக யாழ். மாகாண அ.ம.திகளின் முதல்வர் அருட்பணி போல் ஜெயந்தன் பச்சேக், யாழ்.மறை மாவட்ட குருமுதல்வர் அருட்பணி ப.யோ.ஜெபரட்ணம், திருக்குடும்ப கன்னியர் மட யாழ். மாகாண முதல்வர் அருட் சகோதரி தியோபின் குரூஸ் ஆகியோரும் கலந்து சிறப்பிக்கவுள்ளனர்.

இந்நிகழ்வில் நூல்களுக்கான மதிப்பீட்டுரைகளை கவிஞர் ந. வடிவழகையன், திருமதி. மேரி மெக்டலீன் ஜெயக்கொடி ஆகியோர் வழங்குவார்கள். ஏற்புரையை நூலாசிரியர் செ.அன்புராசா அ.ம.தி வழங்குவார். (நி-3)

# டெங்கு நோயைக் கட்டுப்படுத்துவது தொடர்பான கலந்துரையாடல்



(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாண மாவட்டத்தில் டெங்கு நோயைக் கட்டுப்படுத்தல் தொடர்பான கலந்துரையாடல் யாழ்ப்பாண மாவட்ட அரசாங்க அதிபர் மருதலிங்கம் பிரதீபன் தலைமையில் நேற்று முன் தினம் வியாழக்கிழமை யாழ் மாவட்ட செயலக கேட்போர் கூடத்தில் இடம்பெற்றது.

இக் கலந்துரையாடலில் பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் வைத்திய கலாநிதி ஆ.கேதீஸ்வரன், மாவட்ட பிரதேச செயலாளர்கள், சுகாதார வைத்திய அதிகாரிகள், வலயக்கல்விப் பணிப்பாளர்கள், சிரேஷ்ட பொது சுகாதார பரிசோதகர்கள், பிரதேச சபை செயலாளர்கள், கடற்படை மற்றும் இராணுவ அதிகாரிகள் மற்றும் தொடர்புடைய உத்தியோகத்தர்கள் உள்ளிட்ட பலர் கலந்துகொண்டனர். (நி)

# தொழிற்பயிற்சி கற்கைநெறிகளுக்கான விண்ணப்பங்கள் கோரப்பட்டுள்ளன

(யாழ்ப்பாணம்)

இலங்கைத் தொழிற் பயிற்சி அதிகார சபையின் 2025 ஆம் ஆண்டு அரையாண்டிற்கான முழுநேர கற்கைநெறிகள் ஆரம்பமாகவுள்ளன. இக் கற்கை நெறிகள் யாழ்ப்பாணம், கைதடி, காரைநகர், வல்வெட்டித்துறை, பண்டத்தரிப்பு , சுன்னாகம் தொழிற்பயிற்சி நிலையங்களில் இடம்பெறவுள்ளன.

தகவல் தொடர்பாடல் தொழில் நுட்பவியலாளர், மின்னிணைப்பாளர், கணிய அளவையியலாளர், விருந்தினர் வரவேற்பாளர், வெதுப்பாளர், சமையலாளர், நீர்க்குழாய் பொருத்துநர், முச்சக்கர வண்டி பொறிவலர், அலுமினியம் பொருத்துநர், உணவு மற்றும் குளிர்பானம் பரிமாறுபவர், குழந்தை பராமரிப்பாளர், பெண்கள், சிறுவர்களிற்கான ஆடை வடிவமைப்பாளர், சிகையலங்கரிப்பாளர், அழகுக் கலை வல்லுநர், விரைவு சேவை உணவு வழங்குநர், குளிரூட்டி மற்றும் வளி சீராக்கி திருத்துநர், மரவேலை தொழில் நுட்பவியளாளர் மற்றும் காய்ச்சி இணைப்பவர் (வெல்டர்), கட்டட நிர்மான உதவியாளர் போன்ற கற்றை நெறிகளுக்கு விண்ணப்பங்கள் கோரப்பட்டுள்ளன.

இக்கற்கை நெறிகள் அனைத்தும் தேசிய தொழில் தகைமை மட்டம்-4(NVQ-4) சான்றிதழுக்கான பயிற்சி நெறி யாகும். கற்க விரும்புவோர் தங்கள் பதிவுகளை எதிர்வரும் 31.05. 2025 இற்கு முன்னர் மாவட்ட அலுவலகம் , 4 ஆம் மாடி, வீரசிங்கம் மண்டபம், இல. 12 கே. கே. எஸ் வீதி யாழ்ப்பாணம் அல்லது அனைத்து தொழிற்பயிற்சி நிலையங்களிலும் பெற்றுக் கொள்ள முடியும்.

அத்துடன் மேலதிக விபரங்களைப் பெற்றுக்கொள்வதற்கு 021 222 7949 என்னும் இலக்கத்துடன் தொடர்பு கொள்ள முடியும் என இலங்கைத் தொழிற்பயிற்சி அதிகார சபையின் பிரதிப் பணிப்பாளர் இ. நிரஞ்சன் தெரிவித்துள்ளார். (நி-3)

# வலுத்தூக்கல் வீரர்களுக்கான கௌரவிப்பு நிகழ்வுகள்

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாணம் வெளிச்சம் வாழ்வியல் வளர்ச்சி அமைப்பின் ஏற்பாட்டில் வலுத்தூக்கல் வீரர்களுக்கான கௌரவிப்பு நிகழ்வு நாளை ஞாயிற்றுக் கிழமை மாலை 3 மணிக்கு புனித பத்திரிசியார் கல்லூரி மண்டபத்தில் இடம்பெறவுள்ளது.

யாழ்ப்பாணம் வெளிச்சம் அமைப்பின் தலைவர் எஸ்.பி.பீற்றர்போல் தலைமையில் இடம்பெறவுள்ள இந் நிகழ்வில் பிரதம விருந்தினராக யாழ் பல்கலைக்கழக விளையாட்டு விஞ்ஞான அலகின் சிரேஷ்ட விரிவுரையாளர் கலாநிதி கு. கேதீஸ்வரன், சிறப்பு விருந்தினராக யாழ்ப்பாணம் வலயக்கல்வி அலுவலக பிரதிக் கல்விப் பணிப்பாளர் வி.சாரங்கன், கௌரவ விருந்தினராக நல்லூர் பிரதேச விளையாட்டு உத்தியோகத்தர் செ.சத்தியன் ஆகியோரும் கலந்து கொள்ளவுள்ளனர். (நி-3)

# விண்ணப்பம் கோரல்

(யாழ்ப்பாணம்)

இலங்கை திறந்த பல்கலைக்கழகத்தினால் நடத்தப்படும் முயற்சியாண்மை மற்றும் சிறு வணிக முகாமைத்துவ உயர்தரச் சான்றிதழ் கற்கை நெறிக்கான விண்ணப்பங்கள் கோரப்பட்டுள்ளன.

இக் கற்கைநெறிக்கு விண்ணப்பிக்க விரும்புவோர் விண்ணப்ப முடிவுத் திகதியன்று 16 வயதிற்கு மேற்பட்டவராகவும், க.பொ.த சாதாரண தரத்தில் இரண்டிற்கு மேற்படாத அமர்வுகளில் கணிதம், முதலாம் மொழி, உட்பட ஆறுபாடங்களில் சித்தியடைந்திருத்தலோடு ஏதாவது இரு திறமைச் சித்திகள் காணப்பட வேண்டும்.

விண்ணப்பப் படிவங்களை 15.06. 2025 இற்கு முன்னதாக யாழ்ப்பாணப் பிராந்திய நிலையம் பிறவுண் வீதி, கொக்குவிலில் அமைந்துள்ள நிலையத்தில் பெற்று விண்ணப்பிக்க முடியும் என யாழ்ப்பாணப் பிராந்திய நிலைய உதவிப் பணிப்பளார் அறிவித்துள்ளார். (நி-3)

# சுதுமலை புவனேஸ்வரி அம்பாளுக்கு மஹோற்சவம் நாளை ஆரம்பம்

(யாழ்ப்பாணம்)

சுதுமலை அருள்மிகு ஸ்ரீ புவனேஸ்வரி அம்பாள் ஆலய வருடாந்த மஹோற்சவம் நாளை ஞாயிற்றுக்கிழமை காலை 11 மணிக்கு கொடியேற்றத்துடன் ஆரம்பமாகித் தொடர்ந்து 18 தினங்கள் திருவிழாக்கள் இடம்பெறவுள்ளன.

இம் மஹோற்சவ தினங்களில் எதிர் வரும் ஜூன் மாதம் 7 ஆம் திகதி சனிக்கிழமை வேட்டைத்திருவிழாவும், 9 ஆம் திகதி திங்கட்கிழமை பெருஞ்சப்பறத்திருவிழாவும், 10 ஆம் திகதி செவ்வாயக்கிழமை காலை 11 மணிக்கு இரதோற்சவமும், 11 ஆம் திகதி புதன் கிழமை காலை 10 மணிக்குத் தீர்த்தோற்சவமும் அன்று மாலை 5.30 மணிக்கு கொடியிறக்கமும் இடம்பெற்று 13 ஆம் திகதி வெள்ளிக்கிழமை பூங்காவன உற்சவமும் இடம்பெறவுள்ளதென ஆலய தர்மகர்த்தா சபையினர் தெரிவித்துள்ளனர். (நி-3)



# சந்தைகளில் நேற்றைய விலை

| மரக்கறி வகைகள் | திருநெல்வேலி | மருதனார்மடம் | சாவகச்சேரி | நெல்லியடி | கிளிநொச்சி |
|---|---|---|---|---|---|
| | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா |
| கத்தரிக்காய் | 400 | 300 | 400 | 350 | 350 |
| உருளைக்கிழங்கு | 240 | 230 | 220 | 200 | 200 |
| பச்சைமிளகாய் | 150 | 120 | 220 | 180 | 200 |
| தக்காளி | 800 | 800 | 1000 | 650 | 800 |
| மரவள்ளிக்கிழங்கு | 200 | 280 | 300 | 250 | 200 |
| கோவா | 500 | 550 | 550 | 350 | 500 |
| கரட் | 800 | 900 | 1000 | 800 | 1000 |
| பூசணி | 160 | 180 | 170 | 170 | 200 |
| புடோல் | 200 | 200 | 200 | 250 | 250 |
| வாழைக்காய் | 100 | 100 | 80 | 80 | 100 |
| சின்ன வெங்காயம் | 300 | 100-300 | 300 | 200-400 | 350 |
| பெரிய வெங்காயம் | 130 | 150 | 120 | 110 | 120 |
| பாகற்காய் | 800 | 600 | 800 | 650 | 800 |
| வெண்டக்காய் | 200 | 250 | 200 | 100 | 400 |
| கருணைக் கிழங்கு | 350 | 350 | 250 | 250 | 400 |
| பயற்றங்காய் | 400 | 400 | 200 | 400 | 200 |
| லீக்ஸ் | 350 | 330 | 350 | 250 | 400 |
| பீற்றூட் | 600 | 500 | 500 | 400 | 600 |
| கறிமிளகாய் | 600 | 600 | 500 | 500 | 600 |
| முருங்கைக்காய் | 1000 | 800 | 1000 | 800 | 1500 |
| போஞ்சி | 300 | 600 | 800 | 400 | 500 |
| கத்தரிதம்புள்ள | 350 | 300 | 300 | -- | 300 |
| கீரை - 1 பிடி | 140 | 80-150 | 200 | 100 | 150 |
| தேசிக்காய் | 250 | 300 | 250 | 300 | 400 |
| தேங்காய் (ஒன்று) | 200 | 250 | 150 | 120-220 | 200-250 |
| இராசவள்ளி | 600 | 650 | 500 | 500 | 600 |
| வெங்காயப்பூ | 400 | 500 | 600 | 450 | 800 |
| முள்ளங்கி | 100 | 150 | 200 | 150 | 300 |
| பொன்னாங்காணி | 120 | 70 | 150 | 100 | 60 |
| வல்லாரை | 60 | 70 | 100 | 80 | 60 |
| ஈரப்பலா | 150 | -- | 100 | -- | -- |

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வேகமாகப் பரவும் டெங்கு, சிக்குன்குனியா சுகாதார தரப்பினர் எச்சரிக்கை!


(கொழும்பு)

**நாட்டில் நிலவும் மழையுடனான வானிலை காரணமாக டெங்கு மற்றும் சிக்குன்குனியா நோய்கள் பரவும் ஆபத்து அதிகரித்து வருவதாக சுகாதார தரப்பினர் எச்சரித்துள்ளனர்.**

கொழும்பு சீமாட்டி ரிட்ஜ்வே சிறுவர் வைத்தியசாலையின் வைத்திய நிபுணர் தீபால் பெரேரா, மழையுடனான வானிலையால், ஆபத்தான நுளம்புகளின் பெருக்கம் அதிகரித்துள்ளதாக சுட்டிக்காட்டியுள்ளார்.

காய்ச்சல், கடுமையான மூட்டு வலி, சில சந்தர்ப்பங்களில் மூக்கில் கறுப்பு புள்ளிகள் தென்படல் போன்ற ஆரம்ப அறிகுறிகள் தென்பட்டால், உடனடியாக மருத்துவ ஆலோசனையைப் பெற வேண்டும் என்று அவர் வலியுறுத்தியுள்ளார். (நி)

# ஐ.நா மனித உரிமைகள் ஆணையாளர் வோல்கர் டர்க் இலங்கை விஜயம்



(கொழும்பு)

ஐ.நா மனித உரிமைகள் ஆணையாளர் வோல்கர் டர்க் எதிர்வரும் ஜூன் 24 ஆம் திகதி இலங்கைக்கு விஜயம் செய்யவுள்ளார்.

இதன்போது அவர் கண்காணிப்பு நடவடிக்கையில் ஈடுபடுவார் என வெளிவிவகார அமைச்சர் விஜித ஹேரத் தெரிவித்துள்ளார். (நி)


யாழ்ப்பாணம்
சர்வதேச புத்தகக் கண்காட்சி
2025
அனைவரும் வருக... பயன் பெறுக...
நம்பமுடியாத விலைக்கழிவு
பெறுமதிமிக்க, கிடைத்தற்கரிய எண்ணற்ற புத்தக வகைகள்...
மருத்துவம், பொருளாதாரம், பொறியியல், வணிகம், கணிதம், கலை, ஆன்மிகம், தத்துவம், நாவல்கள், தகவல் தொழில்நுட்பம்
இன்னும் பல, அரிய புத்தகங்கள்
விரையுங்கள்!
இன்றும் நாளையும் மட்டுமே!
யாழ்ப்பாணம் வீரசிங்கம் மண்டபத்திற்கு...
மே | MAY
21 22 23 24 25
Silver Sponsors
ENTRANCE FREE
யாழ்ப்பாணம் வீரசிங்கம் மண்டபம்
50% வரையிலான விலைக்கழிவு
Official TV Partner
Official News Paper வலம்புரி
9.00 A.M - 8.00 P.M
Organized by


# பதவி விலகினார் சமிந்த எம்.பி

(கொழும்பு)

ஐக்கிய மக்கள் சக்தியின் பதுளை மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர் சமிந்த விஜயசிறி, பண்டாரவளை தொகுதி அமைப்பாளர் பதவியில் இருந்து விலக முடிவு செய்துள்ளார்.

இது தொடர்பான கடிதம் நேற்று காலை பாராளுமன்றத்தில் உள்ள எதிர்க்கட்சித் தலைவர் அலுவலகத்தில் கட்சித் தலைவரும் எதிர்க்கட்சித் தலைவருமான சஜித் பிரேமதாசவிடம் கையளிக்கப்பட்டது. (நி)


அகில இலங்கை இளங்கோ கழகம்
புலமை ஒலி - 2025
சிலப்பதிகார விழா
இடம்
அல்லையம்பதி வடிவேலர் மணி மண்டபம்
துன்னாலை, கரவெட்டி.
காலம் - 2025 மே
23, 24, 25 - மாலை 4 மணி
இன்றைய நிகழ்வுகள்
24.05.2025 சனிக்கிழமை
மாலை 4.00 மணி
கலைஞர் கந்தையா வடிவேலு அரங்கு
வரவேற்பு நடனம்
ரா.லதாங்கி,
கி.இலக்கியா (நெறியாள்கை, செல்வி ச.கீர்த்தனா)
மங்கள விளக்கேற்றல்
திரு.திருமதி செல்வக்கிருஷ்ணன் சாந்த லட்சுமி தம்பதிகள்
(உரிமையாளர், ஸ்ரீகுமரன் நகைமாளிகை,நெல்லியடி)
திரு.திருமதி செல்வகுமார் ஜெயந்தி தம்பதிகள்
கடவுள் வாழ்த்து திரு. மா. கலைச்செல்வன்
கழகக் கீதம், வரவேற்புரை
திரு.க. கஜந்தன்
தலைமையுரை
கௌரவ நா. வேதநாயகன்
(ஆளுநர், வடமாகாணம்)
தொடக்கவுரை
திரு. சி. சத்தியசீலன்
(பிரதேசசெயலர், பருத்தித்துறை)
நன்றியுரை
செல்வன் ஜே. ஜொய்சன்

நிகழ்ச்சித் தொகுப்பு
திரு.த. குருபரன்.
கவியரங்கு
"பழசை மறந்த பழசுகள்"
நடுவர் - சிலம்பிசை கோ. கோகிலரதன்
ஆச்சி - சி. வினோஜிதன்
அப்பு - அ. அபிசா
வாத்திக்கிழவன் - கு. கௌரிபாலன்
பூசாரி ஐயா - ச. சுகர்ணன்
கதாப்பிரசங்கம்
"பாண்டியன் பாவை"
ஆற்றுபவர் :- வாமதேவ சிவசதீபன்
இலக்கிய ஆணைக்குழு
"நீதியை நிலைநாட்டித் தியாகம் செய்தவர் என்ற பெருமைக்குரியவர்"
ஆணையாளர்: கம்பவாரிதி இலங்கை ஜெயராஜ்
தசரதனே!
செந்தமிழ் சொல்லருவி ச.லலீசன், வேல் நந்தகுமார்
பாண்டியன் நெடுஞ்செழியனே!
பேராசான் ஐ.கதிர்காமசேகரன், ம.கோசலை
மனுநீதிகண்ட சோழனே!
பேராசிரியர் ஸ்ரீ பிரசாந்தன், பரா.ரமேஸ்
விருதுபெறும் சான்றோர்
சண்முகநாதன் சுகந்தன் அவர்களால் நிறுவப்பட்ட
திருமதி இரத்தினமணி சண்முகநாதன் ஞாபகார்த்த
கலைப்பணிக்கான உயர் விருது பெறுபவர்
முத்துக்குமாரு கோபாலகிருஷ்ணன்
(இசைவாணர் கண்ணன்)
பொன்னையா செல்வக்கிருஷ்ணன் அவர்களால்
நிறுவப்பட்ட சமயப்பணிக்கான
உயர்விருது பெறுபவர்
கலாபூஷணம் சிதம்பரப்பிள்ளை பசுபதி
பரா.றமேஸ் அவர்களால் நிறுவப்பட்ட
திருமதி. பரமேஸ்வரி பரராஜசிங்கம்
ஞாபகார்த்த சொல் வன்மைக்கான உயர் விருது பெறுபவர்
வலம்புரி ந.விஜயசுந்தரம்
(சி-3024)
விழா சிறப்புற வாழ்த்துவோர்
திருமதி.தனலட்சுமி இராஜரட்ணம் கணேஸ் ஸ்ரோர்ஸ், சாமிமலை (மூச்சம்பலம்)
சிதம்பரப்பிள்ளை ஸ்ரீ ரகுராம் மேலைப்புலோலி, தம்பசிட்டி.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பாரதம்

## மொஸ்கோ மீது உக்ரைன் ட்ரோன் தாக்குதல்
### விமான சேவைகள் பாதிப்பு

(மொஸ்கோ)
ரஷ்ய தலைநகர் மொஸ்கோ நேற்று முன்தினம் வியாழக்கிழமை மிகப்பெரிய ட்ரோன் தாக்குதலுக்கு உள்ளானது.

ரஷ்யப் பாதுகாப்பு அமைச்சகம் வெளியிட்டுள்ள அறிக்கையின்படி, மொஸ்கோவை இலக்காகக் கொண்டு ஏவப்பட்ட 35 உக்ரைனிய ட்ரோன்கள் உட்பட, மொத்தம் 105 ட்ரோன்களை வான் பாதுகாப்பு அமைப்புகள் இடைமறித்து அழித்துள்ளன. இந்தத் தாக்குதல் காரணமாக மொஸ்கோவைச் சுற்றியுள்ள விமானப் போக்குவரத்து கடுமையாகப் பாதிக்கப்பட்டது.


ரஷ்ய ஜனாதிபதி விளாடிமிர் புடின், உக்ரைன் மற்றும் மேற்கத்தேய நாடுகளின் நிபந்தனையற்ற மற்றும் உடனடிப் போர் நிறுத்தத்திற்கான அழைப்புகளை தொடர்ந்து நிராகரித்து வருகிறார்.

2014இல் இணைக்கப்பட்ட கிரிமியா தீபகற்பம் உட்பட உக்ரைனின் சுமார் ஐந்தில் ஒரு பகுதியை ரஷ்யா தற்போது கட்டுப்படுத்துகிறது.

மூன்று ஆண்டுகளுக்கும் மேலாக நீடித்து வரும் இந்த மோதல், பல்லாயிரக்கணக்கான உயிர்களைப் பலி வாங்கியுள்ளது.

லட்சக்கணக்கான மக்கள் தங்கள் வீடுகளை விட்டு வெளியேற வேண்டிய கட்டாயத்திற்கு உள்ளாகியுள்ளனர். உக்ரைனின் கிழக்கு மற்றும் தெற்கில் உள்ள நகரங்கள் மற்றும் கிராமங்கள் கடுமையாக சேதமடைந்துள்ளன.

இந்தப் புதிய ட்ரோன் தாக்குதல், மோதலின் தீவிரத்தை மேலும் அதிகரித்துள்ளதுடன், ரஷ்யத் தலைநகரின் பாதுகாப்பிற்கு ஒரு புதிய சவாலாக அமைந்துள்ளது. (நி)



## குடியிருப்புப் பகுதியில் விழுந்து நொறுங்கிய விமானம்



(வோஷிங்டன்)
அமெரிக்காவின் சான்டியாகோ நகரில் சிறிய ரக விமானம் குடியிருப்புப் பகுதியில் நொறுங்கி விழுந்து விபத்துக்குள்ளானதில் பலர் பலியானதாக அஞ்சப்படுகிறது.

அமெரிக்காவின் கலிபோர்னியாவின் சான்டியாகோ பகுதியில் சிறிய விமானம் ஒன்றில் விமானி உள்ளிட்ட 10 பேர் பயணித்தனர். குடியிருப்புப் பகுதியில் இந்த விமானம் திடீரென விழுந்து விபத்துக்குள்ளானது.

பனி மூட்டம் காரணமாக இந்த விபத்து ஏற்பட்டதாகத் தகவல் வெளியாகி உள்ளது.

விமானம் நொறுங்கி விழுந்ததால் 15 இற்கும் மேற்பட்ட வீடுகள் தீப்பிடித்து எரிந்தன.

பல கார்கள் தீயில் எரிந்து நாசமாகின. தகவல் அறிந்து வந்த தீயணைப்பு படையினர் மீட்புப் பணியில் ஈடுபட்டனர்.

விபத்து நடந்த இடமருகே வசித்த 100இற்கும் மேற்பட்டோர் பத்திரமாக மீட்கப்பட்டனர்.

இந்த விபத்தில் பலர் உயிரிழந்திருக்க வாய்ப்பு உள்ளதாக அதிகாரிகள் தெரிவித்துள்ளனர்.

விபத்து நடந்த இடத்தின் அருகே யாரும் செல்ல வேண்டாம் என அறிவுறுத்தப்பட்டுள்ளது. (நி)

## அவுஸ்திரேலியாவில் வரலாறு காணாத வெள்ளம்

(கன்பெரா)
அவுஸ்திரேலியாவின் கிழக்கு கடற்கரைப் பகுதியில் கடந்த இரண்டு நாட்களாகப் பெய்த கனமழையால் நியூஸ் சவுத் வேல்ஸ் நகரத்தில், 90 ஆண்டுகளில் இல்லாத அளவுக்கு வெள்ளப் பெருக்கு ஏற்பட்டுள்ளது.

அவுஸ்திரேலியாவின் முக்கிய சுற்றுலா நகரமான சிட்னிக்கு வடக்கே அமைந்துள்ளது நியூஸ் சவுத் வேல்ஸ் நகரம்.

இங்கு கடந்த இரண்டு நாட்களாக கனமழை பெய்து வருகிறது. இதில் டாரி, கெம்ப்சி, போர்ட் மெக்குவாரி, காப்ஸ் ஹார்பர் மற்றும் பெல்லிங்கன் உள்ளிட்ட பகுதிகளை வெள்ளம் சூழ்ந்தது. டாரி நகரில் மட்டும் ஒரு மாதத்திற்கு பெய்யவேண்டிய மழை ஒரே நாளில் பெய்தது.

தொடர் கனமழையால், நியூஸ் சவுத் வேல்ஸில் ஏராளமான நீர்நிலைகள் நிரம்பி, வெள்ளம் குடியிருப்புகளை நோக்கி பாய்ந்தது. நூற்றுக்கணக்கான வீடுகளும், சாலைகளும் நீரில் மூழ்கின.

500இற்கும் மேற்பட்டோர் வெள்ளத்தில் சிக்கினர். வீடுகளின் மேல்பகுதியிலும், பாலங்களிலும் அவர்கள் தஞ்சம் அடைந்தனர்.

ஹெலிகொப்டர்களை பயன்படுத்தி அவர்களை மீட்புப்படையினர் பத்திரமாக மீட்டனர்.

வெள்ளத்தில் மூழ்கி இருவர் உயிரிழந்த நிலையில், சாலையில் பயணித்த இருவர் நீரில் அடித்துச் செல்லப்பட்டதாகக் கூறப்படுகிறது. கடந்த 90 ஆண்டுகளில் இல்லாத அளவுக்கு வெள்ளப் பெருக்கு ஏற்பட்டுள்ளதாக அதிகாரிகள் தெரிவித்தனர். (நி)



## ரஷ்யா
## அமெ

(வோஷிங்டன்
உக்ரைனு
சூழ்நிலையில் ர
படுத்தலாம் என
தெரிவித்துள்ளது

உக்ரைனுடன் நடக்கும் போர் மேலும் தீவிரமாகி வரும் நிலையில், அமெரிக்க பாதுகாப்பு உளவுத்துறை வெளியிட்டுள்ள புதிய உளவுத் துறை மதிப்பீட்டில், இந்தத் தகவல் வெளியாகியுள்ளது.

மேலும் அந்த அறிக்கையில், தெரிவிக்கப்பட்டுள்ளதாவது, உக்ரைன் போரில் ரஷ்யா அணுகுண்டுகளை பயன்படுத்தும் சாத்தியம் குறை

ஆ
மைய
அபா
நம்பி
பயன்
என

"பு
பெரு
ரலில்
புடின்
கொ
திருப்

## காசா மீது கொ
### இஸ்ரேலை வலியுறு

(ஜெனீவா)
காசா மக்கள் கடுமையாக பாதிக்கப்பட்டுள்ளதால், போரை நிறுத்துமாறு உலக சுகாதார அமைப்பின் தலைவர் டெட்ரோஸ் அதானோம், இஸ்ரேலை வலியுறுத்தியுள்ளார்.

பாலஸ்தீனத்தின் காசாவை ஆளும் ஹமாஸ் பயங்கரவாத அமைப்பினர், கடந்த 2023ஆம் ஆண்டு இஸ்

ரேலு
நடத்

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

## வெளிநாடு

# உக்ரைன் போர் தீவிரம் அணுகுண்டு பயன்படுத்தலாம்!

## மெரிக்க உளவுத்துறை தகவல்

(ங்டன்)

**னுடனான போரில் அவசர ல் ரஷ்யா அணுகுண்டு பயன் ான அமெரிக்க உளவுத்துறை ளது.**

குறைவாகவே இருக்கின்றது.

ஆனால் ரஷ்யா தலைமையகம் அவர்களின் ஆட்சி அபாயத்தில் உள்ளது என நம்பினால், அணு ஆயுதங்களை பயன்படுத்த வாய்ப்பு உள்ளது. என தெரிவித்துள்ளது.

"புதிய அணு கொள்கையில் பெரும் மாற்றங்கள் 2025 ஏப்ரலில், ரஷ்ய ஜனாதிபதி விளாடிமிர் புடின் அறிவித்த புதிய அணு கொள்கை மிக முக்கியமான திருப்பு முனையாகப் பார்க்கப்படுகிறது.

இதில், சாதாரண தாக்குதலுக்கே அணு ஆயுத பதிலடி கொடுக்கலாம் என கூறப்பட்டுள்ளது.

மேலும், ஒரு சாதாரண தாக்குதலில் அணு ஆயுதமுள்ள நாடு உடந்தையாக இருந்தால், அதை அணுத் தாக்குதலாகவே ரஷ்யா கருதி பதிலடி செய்யும்.



ரஷ்யாவின் இறையாட்சி மற்றும் பாதுகாப்பிற்கு மிக முக்கியமான ஆபத்து ஏற்பட்டால், அணுகுண்டு பயன்படுத்தலாம்.

வான் வழித் தாக்குதல், குரூஸ் ஏவுகணை, ட்ரோன், ஹைப்பர் சோனிக் ஆயுதங்கள் போன்ற பெருந்தொகையான ஒருங்கிணைந்த தாக்குதல் நடந்தால், அது அணுத் தாக்குதலுக்கு தகுந்த காரணமாக கருதப்படும்" என அமெரிக்க உளவுத்துறை தெரிவித்துள்ளது. (நி)

# காஞ்சம் கருணை காட்டுங்க

## யுறுத்தும் உலக சுகாதார நிறுவனம்



ரேலுக்குள் புகுந்து தாக்குதல் நடத்தியது. இதில் 1,139 இஸ்ரேல் மக்கள் கொல்லப்பட்டனர்.

இந்தச் சம்பவத்திற்கு பதிலடியாக காசாவில் இஸ்ரேல் தொடர்ந்து தாக்குதல் நடத்தி வருகிறது.

இரு ஆண்டுகளை நெருங்கி நடந்து வரும் இந்தப் போரில், காசாவில் 53,475 பேர் கொல்லப்பட்டுள்ளனர்.

மோதலை நிறுத்தும்படி இரு தரப்பையும் உலக நாடுகள் வலியுறுத்தி வருகின்றன. போர் நிறுத்த ஒப்பந்தம் எட்டப்பட்ட நிலையில், பிணைக்கைதிகளை விடுவிப்பதில் ஹமாஸ் தாமதம் காட்டியதால், இஸ்ரேல் மீண்டும் தாக்குதலை நடத்தி வருகிறது.

இந்த நிலையில், காசாவில் பொதுமக்கள் கடுமையாக பாதிக்கப்பட்டு வருவதாகவும், காசா மீது கொஞ்சம் கருணை காட்டும்படியும் இஸ்ரேலிடம் உலக சுகாதார அமைப்பின் தலைவர் டெட்ரோஸ் அதானோம் வலியுறுத்தியுள்ளார். (நி)




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இலங்கையிடமிருந்து விரைவான சீர்திருத்தங்களை எதிர்பார்க்கும் ஐ.எம்.எப்

(கொழும்பு)

இலங்கையின் விரிவாக்கப்பட்ட நிதி வசதி நான்காவது மதிப்பாய்வில் எட்டப்பட்ட ஊழியர்கள் அளவிலான ஒப்பந்தத்தை அதன் நிர்வாகக் குழு அங்கீகரிக்கும் என்று சர்வதேச நாணய நிதியம் நம்பிக்கை தெரிவித்துள்ளது.

இருப்பினும், இந்த ஒப்புதல் இலங்கை முக்கிய சீர்திருத்த உறுதிமொழிகளை நிறைவேற்றுவதைப் பொறுத்தது என்று ஐ.எம்.எப்இன் தொடர்புத்துறையின் பணிப்பாளர் ஜூலி கோசாக் குறிப்பிட்டார். வாராந்திர ஊடகவியலாளர் சந்திப்பில் கலந்து கொண்டு உரையாற்றும் போதே அவர் இதனைத் தெரிவித்தார். இது தொடர்பில் மேலும் உரையாற்றிய அவர்,

ஏப்ரல் 25ஆம் திகதி ஐ.எம்.எப் ஊழியர்களும் இலங்கை அதிகாரிகளும் இலங்கையின் விரிவாக்கப்பட்ட நிதி வசதியின் கீழ் இலங்கையின் திட்டத்தின் நான்காவது மதிப்பாய்வு குறித்த பணியாளர் நிலை ஒப்பந்தத்தை எட்டினர்.

மேலும், இந்த மதிப்பாய்வு எங்கள் நிர்வாக வாரியத்தால் அங்கீகரிக்கப்பட்டவுடன், இலங்கைக்கு சுமார் $344 மில்லியன் நிதியுதவி கிடைக்கும்.

மதிப்பாய்வை முடிப்பது நிர்வாக வாரியத்தின் ஒப்புதலுக்கு உட்பட்டது.

மேலும், அந்த வாரியக் கூட்டம் வரும் வாரங்களில் நடைபெறும் என்று நாங்கள் எதிர்பார்க்கிறோம்.

வாரியக் கூட்டத்தின் துல்லியமான நேரம் இரண்டு விடயங்களைப் பொறுத்தது. முதலாவது முந்தைய நடவடிக்கைகளை செயற்படுத்துதல் முக்கிய முந்தைய நடவடிக்கைகள் மின்சார செலவுகளை மீட்டெடுப்பது, செலவு மீட்பு விலை நிர்ணயம் மற்றும் தானியங்கி மின்சார விலை சரிசெய்தல் பொறி முறையின் சரியான செயற்பாட்டை உறுதி செய்தல் தொடர்பானவை.

இரண்டாவது தற்செயல் நிதி உத்தரவாத மதிப்பாய்வை நிறைவு செய்வதாகும் இது பலதரப்பு கூட்டாளிகள், இலங்கைக்கு உறுதியளித்த நிதி பங்களிப்புகளை உறுதிப்படுத்துவதிலும், கடன் மறுசீரமைப்பில் போதுமான முன்னேற்றம் ஏற்பட்டுள்ளதா என்பதிலும் கவனம் செலுத்தும். எனவே, சுருக்கமாக, மதிப்பாய்வை நிறைவு செய்வது நிர்வாகக் குழுவின் ஒப்புதலுக்கு உட்பட்டது.

வாரியக் கூட்டம் வரும் வாரங்களில் நடைபெறும் என்று நாங்கள் எதிர்பார்க்கிறோம் என தெரிவித்தார். (நி)


# கல்யாணமாலை

## சர்வதேச இலவச திருமண சேவை

| இவர்களுக்கு மணமகள் தேவை | இவர்களுக்கு மணமகன் தேவை |
|---|---|
| பிறப்பு:1995-.இந்து<br>நட்சத்திரம்: உத்தரம்<br>உயரம்: 5'10"<br>தகைமை/தொழில்: BSc,Surveyor<br>எதிர்பார்ப்பு: தகுதியான பெண்<br>தொ.இ: B/15510 | பிறப்பு:1999-இந்து<br>நட்சத்திரம்: விசாகம்<br>கி-பா- 44<br>உயரம் : 5'<br>தகைமை/தொழில்: BBA,Work(pvt)<br>எதிர்பார்ப்பு: Accountant, Engineer, Teacher<br>தொ.இ: G/15514 |
| பிறப்பு:1988-இந்து<br>நட்சத்திரம்:உத்தரட்டாதி<br>கி.பா:46<br>உயரம் :5'7"<br>தகைமை/தொழில்-A/L,Deputy Manager(pvt)<br>எதிர்பார்ப்பு:அரச உத்தியோகம்<br>தொ.இ: B/15511 | பிறப்பு:1991-இந்து<br>நட்சத்திரம்-பூரம்<br>1இல்செவ்<br>கி-பா-26 1/2<br>உயரம் : 5'5"<br>தகைமை/தொழில்: BA, DO<br>எதிர்பார்ப்பு: வெளிநாடு ,அரச உத்தியோகம்<br>தொ.இ: G/15515 |
| பிறப்பு:1989-இந்து<br>நட்சத்திரம்:கேட்டை<br>கி.பா:12<br>உயரம் :5'7"<br>தகைமை/தொழில்:BA,MA,Teacher<br>எதிர்பார்ப்பு: தகுதியான பெண்<br>தொ.இ: B/15512 | பிறப்பு:2002-இந்து<br>நட்சத்திரம்-சதயம்<br>உயரம் -5'3"<br>தகைமை/தொழில்: College,Teacher<br>எதிர்பார்ப்பு: தகுதியான ஆண்(வெளிநாடு)<br>தொ.இ: G/15516 |
| பிறப்பு: 1992- இந்து<br>நட்சத்திரம் :மகம்<br>உயரம்:5'4"<br>தகைமை/தொழில்: HNDIT, Work (PVT)<br>எதிர்பார்ப்பு: அரச உத்தியோகம்<br>தொ.இ: B/15517 | பிறப்பு-1994-இந்து<br>நட்சத்திரம்:உத்தரம்<br>கி.பா - 32<br>உயரம் : 5'4"<br>தகைமை/தொழில் -Counseler<br>எதிர்பார்ப்பு: அரச தனியார் உத்தியோகம்,வெளிநாடு<br>தொ.இ: G/15518 |
| பிறப்பு: 1987- இந்து<br>நட்சத் திரம் :சதயம்<br>கி.பா:31 1/2<br>11இல் சூரி செவ்<br>உயரம்:5'2"<br>தகைமை/தொழில்: A/L,சவூதி<br>எதிர்பார்ப்பு: தகுதியான பெண்<br>தொ.இ: B/15519 | பிறப்பு:1996-இந்து<br>நட்சத்திரம்:விசாகம்<br>கி.பா - 4 1/2<br>உயரம் : 5'7"<br>தகைமை/தொழில் -MBBS,Doctor<br>எதிர்பார்ப்பு: Doctor, Engineer<br>தொ.இ: G/15520 |

இல. 144, பிறவுண் வீதி, யாழ்ப்பாணம்
தொடர்பு:- 021 720 1005, 076 097 3120
E-mail:- kalyanamalai.jaffna@gmail.com
அலுவலக நேரம்:- காலை 9 மணி தொடக்கம் மாலை 4.45 மணிவரை
விடுமுறை தினம்:- ஞாயிற்றுக்கிழமை
பதிவுக்கட்டணம் 4000 ரூபாய் மட்டும்


# இன்று ஒரு தகவல் 378

தென்கச்சி கோ.சுவாமிநாதன்



## கணவனும் மனைவியும்!

ஒருவர் மிகவும் அவசரமாக வந்தார்.

"சார்! மனிதன் நிம்மதியாக இருப்பதற்கு என்ன வழி?"என்று கேட்டார்.

"சீக்கிரமாக ஒரு கல்யாணத்தை செய்யுங்கள் எல்லாம் சரியாகி விடும்!"என்றேன்.

அவர் என்னை ஒரு மாதிரியாகப் பார்த்தார்:

"ஏற்கனவே எனக்குக் கல்யாணம் ஆகிவிட்டது சார். அதனாலே தான் நிம்மதியாக இருப்பதற்கு வழி கேட்கிறேன் உங்களிடம் - என்றார்.

"சரி இவர் நம்ம கேஸ்! என்று நினைத்துக்கொண்டு என்னிடம் இருந்த ஒரு சின்ன புத்தகத்தை அவரிடம் தூக்கிக் கொடுத்தேன் படித்துப் பாருங்கள் என்று.

"கல்யாணத்திற்குப் பிறகும் சந்தோஷமாக இருப்பதற்கு என்ன வழி" என்ற கேள்விக்கு அந்தப் புத்தகத்திலே விளக்கம் இருந்தது.

கணவன் மனைவிக்குள்ளே சிக்கல் வராமல் இருப்பதற்கு அதிலே சில வழிகளைச் சொல்லியிருக்கிறார்கள் அது எல்லாம் என்னென்ன? அப்படி என்று இப்போது பார்க்கலாமா?

குடும்பம் என்று இருந்தால் "கோபம்" வரத்தான் செய்யும். அது வந்துவிட்டுப் போகட்டும் பரவாயில்லை. ஆனால் அந்தக் "கோபம்"ஒரே நேரத்திலே இரண்டு பேருக்கும் வந்து விடாமல் பார்த்துக் கொள்ள வேண்டும்

ஒரு சமயத்திலே யாராவது ஒருவர் தான் கோபப்பட வேண்டும். அடுத்தவர் அமைதியாக இருக்க வேண்டும். அதன் பின்பு இவர் அமைதியானவுடன் அவர் ஆரம்பிக்கலாம்! அமைதியானவுடனே அவர் கோபமாக ஏதாவது சொன்னால் உடனே கோபமாக பதில் சொல்லக்கூடாது. கொஞ்சம் பொறுத்து கோபம் தீர்ந்தவுடனே அந்தப் பதிலை சொல்லலாம். அப்போது பதில் கோபமாக இருந்தால்கூட அது அவ்வளவு பெரிதாகத் தெரியாது!

அற்ப விடயத்துக்கெல்லாம் இரண்டு பேருக்குள்ளே ஒரு தர்க்கம் ஆரம்பமாகி விட்டது என்று வைத்துக்கொள்ளுங்கள். கடுமையாக இரண்டு பேரும் விவாதம் செய்கிறீர்கள். உங்களிலே ஒருவர் இதிலே ஜெயிக்க வேண்டும் அது நீங்களாக இருக்க வேண்டாம். அடுத்தவர்கள் ஜெயிப்பதற்கு நீங்கள் துணையாக இருங்கள்.

அப்படி என்றால் நீங்கள் கொஞ்சம் விட்டுக் கொடுக்க வேண்டும். அவ்வளவுதான்

ஏதாவது குற்றம் சொல்ல வேண்டுமா? செய்த தவறை சுட்டிக் காட்ட வேண்டுமா? விமர்சனம் செய்ய வேண்டுமா? செய்யுங்கள். வேண்டாம் என்று சொல்லவில்லை..! ஆனால் சொல்வதை கொஞ்சம் அன்பாக, இதமாகச் சொல்லுங்கள்!

எப்போதோ நடந்த தவறுகளையெல்லாம் இப்போது மறுபடியும் ஞாபகப்படுத்திக் கொள்ளாதீர்கள்.

நான் அப்போதே சொன்னேன். இந்தப் புடவை வேண்டாம் என்று நீங்கள்தான் கேட்கவே இல்லை இப்போது பாருங்கள். கிழிந்து போய்விட்டது.

நீங்கள்தான் கேட்கவில்லை என்று கத்தினார் ஒரு அம்மா.

எப்போது சொன்னீர்கள் என்று கேட்டால் ஒரு பத்து வருடத்திற்கு முன்னால் தீபாவளி சமயத்திலே என்கிறார்.

அது என்ன இன்னமும் அப்படியே புதிதாகவோ இருக்கும்?

உங்களுக்கு அவருதான் பெரிது அவருக்கு நீங்கள்தான் பெரிது அதைவிட இந்த உலகத்துலே வேறு எதுவும் முக்கியம் இல்லை என்று நினையுங்கள்.

"நீ தான் என் உலகம்" என்று எத்தனை தடவை சொல்லியிருப்பீர்கள்? அது எல்லாம் வெறும் "வசனமாக" போய் விடக்கூடாது!

ஏதாவது ஒரு பிரச்சினையைப் பற்றி கடுமையாக விவாதம் செய்து கொண்டிருக்கிறீர்கள். அதை அப்படியே பாதியிலே விட்டுட்டுப் படுக்கைக்குப் போய் விடாதீர்கள். மீதியை நாளைக்குப் பேசலாம் என்று. அப்படி போனால் தூக்கம் வராது!

பிரச்சினையை ஒரு முடிவு செய்து விட்டு அதற்குப் பிறகு தூங்கச் செல்லுங்கள். ஒரு நாள்லே ஒரு தடவையாவது உங்கள் ஜோடியைப் பாராட்டி நல்லவிதமாக கனிவாக ஒரு வார்த்தை சொல்ல வேண்டும் என்று தீர்மானம் செய்யுங்கள்.

ஏதாவது தவறு செய்து விட்டீர்களா? பரவாயில்லை. அதை ஒத்துக்கொள்வதற்கும் மன்னிப்பு கேட்பதற்கும் தயாராக இருங்கள். அது ஒன்றும் கேவலம் இல்லை. வீட்டிற்குள்ளே தானே கேட்கப் போகிறீர்கள். வெளியிலே யாருக்குத் தெரியப் போகுது. எப்படியோ உங்களுக்குள்ளே சமரசம் ஆனால் சரி.

ஒரு "தகராறு"என்று எடுத்துக் கொண்டால் குறைந்த பட்சம் அதற்கு இரண்டு பேர் தேவை. தனியாகவே உட்கார்ந்து கொண்டு நான் இப்போது தகராறு செய்தால் சரியாகும் என்று சொல்ல முடியாது.

இரண்டு பேர் தகராறு செய்கிறார்கள். பொதுவாக அந்த இரண்டு பெயரிலே யார் அதிகமாக பேசுகிறார்களோ அவர் பெயரிலே தான் தவறு இருக்கும்! அதை மனதிலே வைத்துக்கொள்ளுங்கள்.

இதெல்லாம் தான் அந்த புத்தகத்திலே போட்டிருக்கும் வழிமுறைகள் இவ்வளவும் சரியாக வரவில்லை என்றால் சொல்லுங்கள் வேறு புத்தகம் ஏதாவது இருக்கிறதா என்று தேடுவோம்!

ஒரு கணவன் தன்னுடைய மனைவியை அழைத்துக்கொண்டு ஒரு மனோதத்துவ டாக்டரிடம் வந்தார்.

"டாக்டர்! எங்களுக்குக் கல்யாணம் ஆகி முப்பது வருட காலம் தான். ஒரு விடயத்திலே கூட ஒத்துப் போனதில்லை." என்று ஆரம்பித்தார்.

உடனே அந்த அம்மா குறுக்கிட்டு-

"முப்பது வருடம் இல்லை -முப்பத்தி இரண்டு வருடம்" என்றார்!

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

## வவுனியாவில்
# மலேரியா, டெங்கு நோய்களை கட்டுப்படுத்த விசேட நடவடிக்கை

(வவுனியா)

வவுனியாவில் அண்மையில் சில நாட்களாக மலேரியா நோய் தடுப்பு செயற்றிட்ட நடவடிக்கை இடம்பெற்று வருகின்றது.

அந்தவகையில் கடந்த மூன்று நாட்களாக சாந்த சோலைப் பகுதியிலுள்ள வீடுகள், கிணறுகள், சுற்றுப் பகுதிகள் என்பன கண்காணிப்பு நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டது.

இந்தியாவின் ஐயப்ப



மலைக்குச் சென்று திரும்பிய பக்தர்கள் சிலரிடம் காணப்பட்ட மலேரியா நோய் தொற்றுக் காரணமாகவும் மேலும் இத் தொற்று சமூகத்தில் பரவாமல் இருப்பதற்காகவும் இந்நடவடிக்கை தொடர்ந்து இடம்பெற்று வருகின்றது.



மேலும், பொதுமக்கள் தமது இருப்பிடங்களைத் சுத்தம் செய்து வைத்திருக்குமாறும் தமது பகுதியில் டெங்கு நுளம்பு பெருகும் இடங்கள் இனங் காணப்பட்டால் அவற்றிற்கு எதிராக சட்ட நடவடிக்கை எடுக்கப்படவுள்ளதாகவும் இந்த நடவடிக்கைக்கு பொதுமக்கள் தமது பூரண ஒத்துழைப்புக்களை வழங்குமாறும் தெரிவிக்கப்பட்டுள்ளது. (நி-299)

# சிலப்பதிகார விழா 2 ஆம் நாள் நிகழ்வு

(யாழ்ப்பாணம்)

அகில இலங்கை இளங்கோ கழகம் நடத்தும் புலமை ஒலி-2025 சிலப்பதிகார விழாவின் இரண்டாம் நாள் நிகழ்வு இன்று சனிக்கிழமை மாலை 4 மணிக்கு கரவெட்டி துன்னாலை. அல்லையம்பதி வடிவேலர் மண்டபத்திலுள்ள கலைஞர் கந்தையா வடிவேலு அரங்கில் இடம்பெறவுள்ளது.

வடமாகாண ஆளுநர் நா.வேதநாயகன் தலைமையில் இடம்பெறவுள்ள இந் நிகழ்வில் வரவேற்பு நடனத்தினை ரா.லதாங்கி, கி.இலக்கியா ஆகியோரும் மங்கல விளக்கேற்றலை செல்வகிருஷ்ணன் சாந்தலட்சுமி தம்பதிகள் மற்றும் செல்வகுமார் ஜெயந்தி தம்பதிகள் ஆகியோரும் கடவுள் வாழ்த்தினை மா.கலைச்செல்வனும் நிகழ்த்தவுள்ளனர்.

அத்துடன் வரவேற்புரையினை க.கஜந்தனும், தொடக்கவுரையினை பருத்தித்துறை பிரதேச செயலர் சி.சத்தியசீலனும், நன்றியுரையினை ஜெ.ஜொய்சனும் நிகழ்த்தவுள்ளனர்.

குறித்த நிகழ்வில் "பழசை மறந்த பழசுகள்" எனும் தொனிப்பொருளில் சிலம்பிசை கோ.கோகிலரதன் நடுவராகப் பங்கு பற்றும் கவியரங்கு. "பாண்டியன் பாவை" எனும் தொனிப்பொருளில் வாமதேவ சிவசதீபன் ஆற்றும் கதாப் பிரசங்கம் மற்றும் "நீதியை நிலைநாட்டி தியாகம் செய்தவர் என்ற பெருமைக்குரியவர்" எனும் தொனிப்பொருளில் கம்ப வாரிதி இலங்கை ஜெயராஜின் இலக்கிய ஆணைக்குழு என்பன இடம்பெறவுள்ளன.

இந் நிகழ்வில் கலைப் பணிக்கான உயர் விருதினை இசைவாணர் கண்ணன் முத்துக்குமாரு கோபாலக்கிருஸ்ணன் அவர்களும் சமய பணிக்கான உயர் விருதினை கலாபூஷணம் சிதம்பிரப்பிள்ளை பசுபதி அவர்களும் சொல்வன்மைக்கான உயர் விருதினை வலம்புரி பத்திரிகையின் பிரதம ஆசிரியர் ந.விஜயசுந்தரம் அவர்களும் பெற்றுக் கொள்ளவுள்ளனர். (நி-3)

# முள்ளிவாய்க்காலில் நடந்தது இனப்படுகொலையே!
## அங்கீகரிக்கக்கோரி பிரித்தானியாவில் மனு கையளிப்பு



(லண்டன்)

முள்ளிவாய்க்கால் தமிழினப் படுகொலையின் 16 ஆம் ஆண்டு நினைவு நாளையொட்டி, பிரித்தானிய பிரதமர் கீர் ஸ்டார்மருக்கு, தமிழ் இனப்படுகொலையை உத்தியோகபூர்வமாக அங்கீகரிக்கக் கோரியும், ஏனைய யுத்த குற்றவாளிகள் மீதும் தடையை விதிக்கவும், நீதியை நிலைநிறுத்த நட வடிக்கைகள் எடுக்கவும் வலியுறுத்தி மனுவொன்று கடந்த செவ்வாய்க்கிழமை கையளிக்கப்பட்டது. (நி-104)



பச்சிலைப்பள்ளி பிரதேச சபையின் ஒருங்கிணைப்பில் பிரதேச கலைஞர் மற்றும் மாணவர் கௌரவிப்பு நிகழ்வு நேற்று முன்தினம் பச்சிலைப்பள்ளி பிரதேச சபை செயலாளர் த.தர்சினி தலைமையில், மாநாட்டு மண்டபத்தில் நடைபெற்றது. (படம்: தேவானந்தன்)


குருவே துணை

வாழ்க வையகம் வாழ்க வளமுடன்



யாழ்ப்பாணம் மனவளக்கலை மன்ற அறக்கட்டளையின்

வேதாத்திரி மகரிஷி அவர்கள் அருளிய மனவளக்கலை யோகா அடிப்படை பயிற்சிகள் ஆரம்பம்

சக்கரை நோய் – DIABETES
மன உளைச்சல் – TENSION
இரத்த அழுத்தம் – BLOOD PRESSURE
ஆஸ்த்துமா – ASTHMA
முட்டு வலி – JOINT PAIN
இடுப்பு வலி – BACK PAIN
சைனஸ் – SINUS
இருதய நோய்கள் – HEART DISEASE
குழந்தை பேரின்மை – INFERTILITY
மாணவர் கை நடுக்கம் – SHIVERING

தொடர்ந்து பயிற்சிகள் செய்து வர இவற்றில் இருந்து விடுபட்டு ஆரோக்கியமான வாழ்க்கை நம் வசமாகும். சிறுவர்கள் முதல் பெரியவர்கள் வரை எளிய முறை யோகா பயிற்சிகளை பெற ஓர் அரிய சந்தர்ப்பம்

அன்பர்களே பங்கேற்று பலனடைவீர் ...

இடம் :- யாழ்ப்பாணம் அறிவுத்திருக்கோவில்
காலம் :- ஒவ்வொரு வாரமும் சனிக்கிழமை முதல் வெள்ளிக்கிழமை வரை
நேரம் :- மாலை 5.00 தொடக்கம் 7.00 மணி வரை
பயிற்சி வழங்குபவர் :-மனவளக்கலை பேராசிரியர் சு.காமாட்சி அவர்கள்
வாழ்க வளமுடன்

(சி-3025)

தொடர்புகளுக்கு :- யாழ்ப்பாணம் அறிவுத்திருக்கோவில்
இல 81, பிறவுன் வீதி, கொக்குவில் கிழக்கு கொக்குவில், யாழ்ப்பாணம்.
தொ.இல :- 021 222 2772, 077 736 87


# சுகாதார சீர்கேடுகளுடன் மருதங்கேணி பொதுச்சந்தை

(தருமபுரம்)

யாழ். வடமராட்சி கிழக்கு மருதங்கேணி பொதுச் சந்தை நோய் பரவும் இடமாக மாறி உள்ளதாக வர்த்தகர்கள் கவலை தெரிவித்துள்ளனர்.

சம்பவம் தொடர்பாக நேற்று முன்தினம் ஊடகங்களுக்கு கருத்துத் தெரிவித்த வர்த்தகர்கள், நாம் நீண்ட காலமாக மருதங்கேணி பொதுச் சந்தையில் வர்த்தக நடவடிக்கைகளை மேற்கொண்டு வருகின்றோம்.

இங்கு மலசலகூடம் காணப்படுகின்ற போதும் அதற்கான தண்ணீர் வசதி பல மாதங்களாக இல்லை. இதனால் இங்கு வருகின்ற வர்த்தகர்கள் மற்றும் மக்கள் மலசல கூடத்தைப் பாவிக்க முடியாத நிலை காணப்படுகின்றது.

இதனால் இந்தப் பகுதிகளில் துர்நாற்றம் வீசுகின்றது.

பொதுச் சந்தையின் சுற்றுப் புறச் சூழலை இரவு நேரங்களில் பலர் பாவிக்கின்றார்கள். மதுபானப் போத்தல்கள் அதிகமாக காணப்படுகின்றது.

இரவு நேரங்களில் இங்கு வரும் சிலர் சமைத்து சாப்பிட்டு களியாட்டங்களில் ஈடுபடுகிறார்கள். இதனால் பொதுமக்களுக்கு நோய் பரவும் நிலை காணப்படுகிறது.

சம்பந்தப்பட்ட அதிகாரிகள் எமது தேவையை கருத்தில் கொண்டு மலசல கூடத்திற்கான நீர் வசதியைப் பெற்று தருவதுடன் சுற்றுச் சூழலையும் துப்புரவு செய்யுமாறு அவர்கள் கோரிக்கை விடுத்துள்ளனர். (நி-316)


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



கல்கியின் **பாகம் - 4**

# பொன்னியின் செல்வன்

காவியத் தொடர் **781**



"என்ன தெரிந்து கொண்டீர்?" "நான் பார்த்தது தேவ கன்னிகை அல்ல தேவ கன்னிகைகள் ஓடி வந்து அடி பணிவதற்குரிய மணிமேகலாதேவி. கடம்பூர் சம்புவரையரின் செல்வக் குமாரி என்று தெரிந்து கொண்டேன். என்னுடைய ஆருயிர் நண்பன் கந்தமாறனுடைய அருமைத் தங்கை என்பதும் நினைவுக்கு வந்தது."

மணிமேகலையின் புருவங்கள் நெறித்தன. ஏளனமும் கோபமும் கலந்த புன்சிரிப்புடன், "அப்படியா? என் தமையன் கந்தமாறன் தங்களுடைய ஆருயிர் நண்பனா?" என்றாள்.

"அதில் என்ன சந்தேகம், இளவரசி! நாலு மாதங்களுக்கு முன்னால் நான் இங்கு ஒருநாள் வந்திருந்தது நினைவில்லையா? அந்தப்புரத்துக்குகூட வந்து தாய்மார்களுக்கு வணக்கம் செலுத்தினேனே! அது ஞாபகம் இல்லையா!" "நன்றாய் ஞாபகம் இருக்கிறது. அதற்குள் மறந்து விடுமா? அந்த வல்லவரையர் வந்தியத்தேவர் என்னும் வாணர் குலத்து இளவரசர் தாங்கள்தானா?"

"ஆம் இளவரசி! தங்குவதற்கு அரண்மனையும் ஆளுவதற்கு இராஜ்யமும் இல்லாமல் 'அரையன்' என்ற குலப்பெயரை மட்டும் தாங்கிக் கொண்டிருக்கும் அந்த ஏழை நான் தான்! ஒரு காலத்தில் தங்கள் தமையன் என்னிடம் தங்களைப் பற்றி எவ்வளவோ சொல்லியதுண்டு. ஒரு காலத்தில் நானும் கந்தமாறனும் வட பெண்ணை நதிக்கரையில் காவல் செய்து கொண்டிருந்தபோது, தங்களைப் பற்றி அடிக்கடி சொல்லுவான். நானும் ஏதேதோ கனவு கண்டு கொண்டிருந்தேன். பிறகு அந்த எண்ணத்தை மறந்து விட்டேன்."

மணிமேகலையின் உள்ளத்தில் ஓர் அதிசயமான எண்ணம் தோன்றியது. இவன் தன்னைக் குத்திக் கொல்ல முயன்றதாகக் கந்தமாறன் கூறினான். அது எதற்காக இருக்கும்? ஒருவேளை தன்னைப் பற்றியதாகவே இருக்குமோ? தன்னை இவனுக்கு மணம் செய்து கொடுக்க போவதில்லை என்று சொன்னதற்காகக் கந்தமாறனுடன் சண்டையிட்டிருப்பானோ? இந்த எண்ணம் அவள் உள்ளத்தில் இன்பப் புயலை உண்டாக்கியது. அதை அவள் கோபப் புயலாக மாற்றிக் கொண்டாள்.

"ஐயா! பழைய கதையெல்லாம் இப்போது வேண்டாம். இந்த அரண்மனையில் நீர் கள்ளத்தனமாகப் புகுந்ததின் காரணத்தைச் சொல்லும் இல்லாவிடில் உடனே என் தோழியை அழைத்துத் தந்தைக்குச் சொல்லி அனுப்ப வேணும்" என்றாள்.

"இளவரசி! நான் இங்கு வந்த காரணத்தை முன்பே சொன்னேனே! சில கொலைகாரர்கள் என்னைக் கொல்லுவதற்காகத் துரத்திக் கொண்டு வந்தார்கள். அவர்களிடமிருந்து தப்பி ஓடிவந்தபோது பூமியில் ஒரு துவாரம் தெரிந்தது. அது ஏதோ இரகசியப் பாதை என்று அறிந்து கொண்டேன். அதன் வழியாக ஓடித் தப்பிக்கலாம் என்று வந்த போது, அந்த வழி இங்கே கொண்டு வந்து சேர்த்தது!"


"ஐயா! சுத்த வீரர் என்றால் உமக்கே தகும் நானும் எத்தனையோ அஸகாய சூரர்களைப் பற்றிக் கேட்டிருக்கிறேன். ஆனால் உம்மைப் போல் ஓட்டத்தில் சூரனைப் பற்றிக் கேட்டதில்லை. உத்தரகுமாரன் உம்மிடம் பிச்சை வாங்க வேண்டியது தான்!" வந்தியத்தேவன் மனத்தில் சுரீர் என்றது. தான் அசட்டுப் பெண் என்று நினைத்த மணிமேகலை இப்படித் தன்னைக் குத்திக் காட்டும் படி ஆகிவிட்டதல்லவா?

(தொடரும்...)



## சிறுவர் அரங்கம்

## வல்லவனுக்கு வல்லவன்



அது ஒரு அடர்ந்த காடு. அந்த காட்டில் பல்வேறு மிருகங்கள் வாழ்ந்து வந்தன. அவை தமக்குரிய இடங்களில் அமைதியாக வாழ்ந்து கொண்டிருந்தன. அப்படி வாழ்ந்து வந்த மிருகங்களில் ஓநாயும் ஒன்று. ஓநாய் தன் குட்டிகளுடன் ஒரு குகையில் வாழ்ந்து வந்தது.

தினமும் குகையிலிருந்து குட்டிகளை அழைத்துக்கொண்டு வெளியே சென்று வேட்டையாடி உண்டு விட்டு மாலையில் தன் குகைக்கு வந்து விடும். இப்படி அமைதியாக வாழ்ந்து வந்து கொண்டிருந்த பொழுது ஒரு நாள்! அந்த காட்டுக்குள் புலி ஒன்று புதிதாக குடி வந்தது.

அது வரை அந்த காட்டுக்குள் புலி இருந்ததில்லை. அதனால் புலி அங்கு குடி வந்தவுடன் மற்ற மிருகங்கள் அனைத்தும் அதனைக் கண்டு பயந்தன. அவைகள் பயந்தது போலவே அந்தப் புலியின் தோற்றமும் அப்படித்தான் இருந்தது. பிரமாண்டமான உருவமும், சீற்றம் கொண்ட முகமுமாய் இருந்தது அதன் தோற்றம். அது மட்டுமல்ல, வந்தவுடன் அங்கிருந்த நான்கைந்து மிருகங்களை அடித்து கொன்றும் விட்டது. இதனால் மிருகங்கள் எல்லாம் நடுங்கி மிரண்டன.

அப்படிப்பட்ட அந்தப் புலி தான் தங்குவதற்கு ஒரு நல்ல குகையைத் தேடிக்கொண்டிருந்த பொழுது ஓநாய் தங்கியிருந்த குகையைக் கண்டது. அந்தக் குகையினுள் சென்று பார்க்க அது மிக பிரமாதமாய் இருந்தது. ஆஹா இது தான் நாம் வசிக்க சிறந்த இடம் என்று முடிவு செய்து அங்கேயே தனது இருப்பை வைத்துக்கொண்டது.

மாலை தன் குட்டிகளுடன் குகைக்கு வந்த ஓநாய்க்கு குகை வாசலிலேயே தன்னுடைய குகைக்குள் யாரோ இருக்கிறார்கள் என்று மோப்ப சக்தியால் உணர்ந்து கொண்டது. யார் என்று தெரியவில்லை. சரி உள்ளே சென்று பார்ப்போம் என்று முடிவு செய்து கொண்டு தன்னுடைய குட்டிகளை அங்கிருந்த ஒரு புதருக்குள் ஒளிந்திருக்க செய்து விட்டு மெல்ல இது மட்டும் தனியாக உள்ளே நுழைந்தது. புலியார் அங்கு சுகமாய் படுத்து குறட்டை விட்டு தூங்கிக்கொண்டிருந்தது.

புலியை கண்டவுடன் நடு நடுங்கி வெளியே ஓடி வந்து விட்டது. இப்பொழுது என்ன செய்வது என்று தெரியாமல் கவலையில் தன்னுடைய குட்டிகளை அழைத்துக்கொண்டு நடந்தது. இரவு வேறு இருட்டிக்கொண்டு வந்தது. குட்டிகளை வைத்துக்கொண்டு எங்கு தங்குவது என்ற கவலையில் யோசித்துக் கொண்டே நடந்தது. அப்பொழுது கரடியார் தன்னுடைய குகைக்கு திரும்பிக்கொண்டிருந்தது, ஓநாய் கவலையுடன் நடந்து வந்ததை பார்த்தது.

(தொடரும்...)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஆயிரம் காடுகளை உண்டாக்கும் ஆற்றல் ஒரு விதையில் அடங்கியிருக்கிறது. – எமர்சன்

வலம்புரி
TP: 021 222 3378
website : www.valampurii.lk

## உறவுமுறைக் கண்காணிப்பை மீளவும் வலுப்படுத்துங்கள்

எமது தமிழர் பண்பாட்டில் ஒரு காலத்தில் இருந்த கூட்டுக் குடும்பக் கலாசாரம் இப்போது வழக்கொழிந்து போயிற்று.

நாற்சார வீட்டில் மாமன், சித்தப்பன், பாட்டன், பாட்டி எனக் குடியிருந்த குடும்பங்கள் மகிழ்வான குடும்ப சூழலை ஏற்படுத்தியிருந்தன.

ஒருவருக்கொருவர் உதவி. வயதான பெற்றோர்களைப் போட்டி போட்டுப் பராமரிக்கின்ற பாங்கு. பாரம்பரிய உணவுகளைச் செய்து பரிமாறுகின்ற பண்புடைமை என குடும்பச் சூழலில் அன்பும் அறனும் மிகுந்திருந்தன.

இதற்கும் மேலாக, கூட்டுக்குடும்ப வாழ்க்கையில் பிள்ளைகள் மீதான கண்காணிப்பு உறவு முறை வழியாக விரிந்தும் பரந்தும் இருந்தன.

ஆம், பெற்றோர்களின் கண்காணிப்பை விட மாமா, பெரியப்பா, சித்தப்பா, பாட்டன், பாட்டி என்போரின் கண்காணிப்புகள் எம் பிள்ளைகளை சீராகவும் செழுமையாகவும் வளர்த்தெடுத்தன.

இதையும் கடந்து, கூட்டுக்குடும்ப வாழ்க்கை முறையில் நம் பிள்ளைகள் வாழ்வியல் முறைகளையும் சமூக விழுமியங்களையும் கற்றுக் கொண்டனர்.

அதனால் அவர்கள் எங்கு சென்றாலும் அந்தச் சூழலுக்கு ஏற்ப தங்களை தயார்படுத்திக் கொண்டனர்.

இதையும் கடந்து தொழில் சார் தேர்ச்சிகளை நம் பிள்ளைகள் மிக நுட்பமாகக் கற்க முடிந்தது. தொழில் முயற்சிகளில் ஈடுபடுவதிலும் அவர்கள் கருசனை காட்டினர்.

சுருங்கக்கூறின் வேலை இல்லாதிருத்தல் என்ற நிலைமை கூட்டுக்குடும்ப வாழ்வியலில் இருந்ததில்லை.

அதேபோல பாடசாலைக் கல்வி ஒருபுறம், தொழில் முயற்சிகள் மறுபுறம் மற்றும் பாரம்பரிய விளையாட்டுக்கள் அவை சார்ந்த பயிற்சிகள் என பிள்ளைகளின் பருவகாலங்கள் பயனுறுதிமிக்கதாக அமைந்திருந்தன.

ஆனால் என்று கூட்டுக் குடும்ப முறைமை இல்லாதுபோய் பெற்றோர்களும் பிள்ளைகளும் வாழ்கின்ற தனிக்குடும்ப முறைமை நடைமுறைக்கு வந்துற்றதோ, அன்றிலிருந்து நம் பிள்ளைகள் வீடுகளுக்குள் அமுங்கிக் கொண்டனர்.

விவசாயம் உள்ளிட்ட தொழில்முயற்சிகளில் ஈடுபடுகின்ற நிலைமை இல்லாமல் போனது.

கூடவே பெற்றோர்கள் வேலைக்குச் செல்ல பிள்ளைகள் அறைகளுக்குள் தங்களை அடைத்துக் கொள்ள, அவர்களின் ஆளுமைப் பண்புகள் இழக்கப்படலாயின.

போதாக்குறைக்கு இப்போது கையடக்கத் தொலைபேசிகளில் பிள்ளைகள் மூழ்கிவிட அவை பிள்ளைகளின் நடத்தைக் கோலங்களில் மிக மோசமான தாக்கத்தை ஏற்படுத்தி, அதனூடு சமூகப் பிறழ்வுகளைத் தந்து விடுகின்றன.

இங்குதான் மீளவும் எங்கள் உறவுமுறைக் கண்காணிப்பை வலுப்படுத்துவதற்கான ஏதுக்கள் பற்றி நாம் சிந்திக்க வேண்டியவர்களாக உள்ளோம். ஏனெனில் இது காலத்தின் கட்டாய தேவையாக உள்ளது.

# ஐ.எம்.எப் தொடர்பில் அரசாங்கம் வழங்கிய தேர்தல் கால வாக்குறுதிகள் நிறைவேற்றப்பட்டதா?

## அநுர அரசை பாராளுமன்றில் கேள்விக்கணைகளால் துளைத்த சஜித் பிரேமதாஸ

(கொழும்பு)

சர்வதேச நாணய நிதிய இணக்கப்பாட்டில் திருத்தங்களைச் செய்வோம் எனக் கூறி பெரும்பான்மை அதிகாரத்தைப் பெற்றுக் கொண்ட தற்போதைய அரசாங்கம் அந்த ஆணையை இப்போது மீறியுள்ளதென எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாஸ தெரிவித்தார்.

பாராளுமன்றத்தில் நேற்று வெள்ளிக்கிழமை (23) நிலையியற் கட்டளை 27(2) இன் கீழ் கேள்வி எழுப்பி உரையாற்றுகையிலேயே இவ்வாறு தெரிவித்தார்.

அவர் அங்கு தொடர்ந்து உரையாற்றுகையில்,

நான் பின்வரும் கேள்விகளை எழுப்புகிறேன். அரசாங்கத்திடமிருந்து இதற்கான பதில்களையும் விளக்கங்களையும் எதிர்பார்க்கிறேன்.

இருதரப்பு கடன் வழங்குநர்கள் மற்றும் சர்வதேச வர்த்தக பிணைமுறி கடன் உரிமையாளர்களுக்கு இலங்கை செலுத்த வேண்டிய மொத்தக் கடன் எவ்வளவு?.

குறித்த கடன் செலுத்துதல் ஆரம்பமாகும் வருடத்தில் இருந்து, ஒவ்வொரு ஆண்டும் தனித்தனியாகச் செலுத்த வேண்டிய கடன் தவணைத் தொகை எவ்வளவு?

இந்தக் கடன் கொடுப்பனவுகளை வெற்றிகரமாகச் செயற்படுத்த ஒரு நாடாக அடைய வேண்டிய பொருளாதார இலக்குகள் எவை?

2024 ஜனாதிபதித் தேர்தலின் போது, தற்போதைய அரசாங்கம், "வளமான நாடு, அழகான வாழ்க்கை" எனும் கொள்கைப் பிரகடனத்தில் குறிப்பிட்ட நாணய நிதியத்தின் புதிய கடன் நிலைபேறு தன்மை இணக்கப்பாட்டை எட்ட அரசாங்கத்திற்கு ஆணை கிடைத்தது என்பதை நீங்கள் உணர்கிறீர்களா?

புதிய கடன் நிலைபேறு தன்மை இணக்கப்பாட்டை எட்டத் தவறியது மக்கள் வழங்கிய ஆணையை மீறும் செயலல்லவா?

நாணய நிதியத்துடன் எட்டப்பட்ட இணக்கப்பாடுகள், நிபந்தனைகள் எவை? மின்சாரக் கட்டணத்தை 18 வீதத்தால் அதிகரிக்க நடவடிக்கை எடுத்தது இதன் பிரகாரமா?

விரிவான கடன் வசதியின் கீழ் வழங்கப்படும் கடன் தவணைகளின் எண்ணிக்கை யாது ? அந்த ஒவ்வொரு தவணைகளிலும் கிடைக்கப் பெறும் கடன் தொகை எவ்வளவு?

இந்தக் கேள்விகளுக்கான பதில்கள் இல்லாமல் அரசாங்கத்தால் வரவு செலவுத்திட்டத்தை தயாரிக்க முடியாது என்பதால் இதற்கான பதில்களை வழங்காமல் இருக்க முடியாது என்றார். (ம-4,7)

### வவுனியாவில் உள்ள வீடொன்றில் சூட்சுமமான முறையில்

# துப்பாக்கி ரவைகள், சீருடைகளை பதுக்கி வைத்திருந்த இருவர் கைது

(வவுனியா)

வவுனியா போகஸ்வெவ செலலிஹினிகம கிராமத்தில் உள்ள ஒரு வீட்டில் மறைத்து வைக்கப்பட்டிருந்த துப்பாக்கிகளுக்கான ரவைகள் மற்றும் பொலிஸ் விசேட அதிரடிப்படையினர் சீருடைகளுடன் 22ஆம் திகதி வியாழக்கிழமை மாலை இருவர் கைது செய்யப்பட்டதாக வவுனியாப் பொலிஸார் தெரிவித்தனர்.

வவுனியா மாவட்ட குற்றப் புலனாய்வுப் பிரிவினருக்குக் கிடைத்த இரகசியத் தகவலையடுத்து மேற்கொண்ட சுற்றிவளைப்பின் போது இரண்டு கிராம் கேரளக் கஞ்சாவுடன் சந்தேக நபரொருவரைக் கைது செய்தனர்.

அதையடுத்து அவரது வீட்டை மேலும் சோதனை செய்தபோது துப்பாக்கி ரவைகள் மற்றும் பொலிஸ் விசேட அதிரடிப்படை சீருடைகளும் கண்டுபிடிக்கப் பட்டுள்ளன.

அதன்பிரகாரம் கண்டுபிடிக்கப்பட்ட ரவைகளுடன் T-56 வகை துப்பாக்கிகளுக்குப் பயன்படுத்தப்படும் 296 ரவைகள், 12-போர் வகையின் 27 ரவைகள், M-16 துப்பாக்கிகளுக்குப் பயன்படுத்தப்படும் 19 ரவைகள், T-56 வகை துப்பாக்கிகளுக்குப் பயன்படுத்தப்படும் ரவைகளின் தொகுப்பு, T-56 துப்பாக்கிப் பயிற்சிக்கு பயன்படுத்தப்படும் 124 பயிற்சி ரவைகள், 9 மி.மீ தானியங்கி கைத்துப்பாக்கிகளுக்குப் பயன்படுத்தப்படும் 365 வெற்று ரவைகள் மற்றும் 24 பயன்படுத்தப்பட்ட T-56 வெற்று ரவைகள் ஆகியவை உள்ளடங்குகின்றன.

இது தவிர வீட்டைச் சோதனை செய்தபோது சூட்சுமமாக மறைத்து வைக்கப்பட்டிருந்த இராணுவ மற்றும் விசேட அதிரடிப்படை சீருடைகள், அதற்கான பிரத்தியேக பொருட்கள், காலணிகள், காற்சட்டை, தொப்பிகள் ஆகியவையும் கண்டுபிடிக்கப்பட்டுள்ளன.

இது தொடர்பில் சந்தேக நபரிடம் மேற்கொள்ளப்பட்ட ஆரம்பகட்ட விசாரணையில் வீட்டின் உரிமையாளர் ஒரு பொலிஸ் சிறப்பு அதிரடிப் படைவீரர் என்பதும் அவர் தொடர்ந்து இவற்றை வீட்டிற்கு கொண்டு வந்து மறைத்து வைத்திருப்பதும் தெரியவந்தது.

இதனையடுத்து வீட்டின் உரிமையாளரான சிறப்புப் படைவீரரும் பொலநறுவை, ஹிங்குராக்கொடைப் பகுதியைச் சேர்ந்த 39 வயதுடையவரும் கைது செய்யப்பட்டுள்ளதுடன் அவர்கள் இருவரையும் பொலிஸார் வவுனியா நீதவான் நீதிமன்றத்தில் ஆஜர் படுத்தவுள்ளனர்.

அண்மைக் காலமாக நாட்டில் சூட்டுச் சம்பவங்கள் அதிகரித்துள்ளதுடன் குற்றச் சம்பவங்களுடன் பாதுகாப்புத் தரப்பினர் தொடர்புபடும் நிலைமைகளும் அதிகரித்துள்ளமை சுட்டிக்காட்டத்தக்கது. (ம-4,7)

# நீரிழிவு நோய் நூல் வெளியீடு

சுகாதார மேம்பாட்டை நோக்கிய பயணத்தின் ஓர் அங்கமாக பருத்தித்துறை ஆதார வைத்திய சாலையின் பொது வைத்திய நிபுணர் செல்லத்துரை பிரசாத் அவர்கள் எழுதிய "நீரிழிவு நோய்" பொது மக்களுக்கான ஒரு வழிகாட்டி நூலின் வெளியீட்டு விழாவானது இன்று [illegible] 4 மணியளவில் பருத்தித்துறை சூரிய மஹால் மண்டபத்தில் சிறப்புற இடம்பெறவுள்ளது.

பொது வைத்திய நிபுணர் க.சத்தியமூர்த்தி தலைமையேற்று நடாத்தும் இந்நிகழ்வில் நூலின் வெளியீட்டுரையை பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் மருத்துவர் [illegible] ஆற்றவுள்ளார். (ம-4,7)

# சுமண ரதன தேரர் பொலிஸாரால் கைது

மட்டக்களப்பு மங்களாராம விகாரையின் விகாராதிபதி அம்பிட்டிய சுமண ரதன தேரர் பொலிஸாரால் கைது செய்யப்பட்டுள்ளார்.

அம்பாறை உஹன பொலிஸ் நிலையத்தில் குழப்பம் விளைவிக்கும் வகையில்நடந்து கொண்ட சம்பவத்தை மையமாகக் கொண்டு இந்தக் கைது நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளது.

உஹன பொலிஸாரால் சந்தேகநபர் ஒருவர் கைது செய்யப்பட்டபோது, அவருடன் இருந்த இரு பிள்ளைகளைப் பாதுகாப்பற்ற முறையில் முச்சக்கர வண்டியில் அழைத்துச் செல்ல முயன்றதற்கு எதிர்ப்புத் தெரிவித்து தேரர் அந்த பொலிஸ் நிலையத்தில் குழப்பம் விளைவிக்கும் வகையில் நடந்து கொண்டதாகப் பொலிஸார் தெரிவித்தனர். (ம-4,7)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தமிழ் - சிங்கள மொழி கற்கை; கட்டாயமாக்கப்படவுள்ள நடைமுறை



(கொழும்பு)

ஆறாம் வகுப்பு முதல் ஒன்பதாம் வகுப்பு வரையிலான சிங்கள மாணவர்கள் தமிழை இரண்டாவது மொழியாகவும், தமிழ் மாணவர்கள் சிங்களத்தை இரண்டாவது மொழியாகவும் கற்ற வேண்டியது கட்டாயமாக்கப்படவுள்ளதாக பிரதமர் ஹரிணி அமரசூரிய தெரிவித்துள்ளார்.


பாராளுமன்ற உறுப்பினர் எஸ்.எம்.மரிக்கார் நேற்று பாராளுமன்றத்தில் எழுப்பிய கேள்விக்கு பதிலளிக்கும் போதே அவர் இவ்வாறு குறிப்பிட்டார்.

அதன்படி, ஆறாம் வகுப்பு முதல் ஒன்பதாம் வகுப்பு வரையிலான தமிழ் மாணவர்கள் சிங்கள மொழியை இரண்டாம் மொழியாக கற்க வேண்டும்.

அதேவேளை, சிங்கள மாணவர்கள் தமிழ் மொழியை இரண்டாம் மொழியாக கற்க வேண்டும்.

ஆசிரியர்களுக்கு குறித்த மொழிகளைக் கற்பிக்க பயிற்சி அளிக்கப்படும் வரை இந்தத் திட்டம் ஒரு முன்னோடித் திட்டமாக மேற்கொள்ளப்படும் என்று அவர் தெரிவித்தார்.(நி)

# திரைத்துறையில் இலங்கை கலைஞர்கள் உள்ளீர்க்கும் முயற்சியில் சந்தோஷ் நாராயணன்



(கொழும்பு)

தென்னிந்திய திரைத் துறையில் இலங்கைக் கலைஞர்களை உள்ளீர்த்தல் மற்றும் இலங்கைத் திரைத் துறையினை அடுத்த கட்டத்திற்குக் கொண்டு செல்லல் உள்ளிட்ட பல விடயங்கள் தொடர்பில் பிரபல தென்னிந்திய இசையமைப்பாளர் சந்தோஷ் நாராயணன் இலங்கை பாராளுமன்ற உறுப்பினர்களைச் சந்தித்துக் கலந்துரையாடியுள்ளார்.

குறித்த சந்திப்பானது நேற்று முன்தினம் பாராளுமன்ற வளாகத்தில் உள்ள தேசிய மக்கள் சக்தியின் அலுவலகத்தில் இடம்பெற்றுள்ளதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இச்சந்திப்பில் தென்னிந்திய இசையமைப்பாளர் சந்தோஷ் நாராயணன், அவரது துணைவி மீனாட்சி நாராயணன், கடற்றொழில் அமைச்சர் இ.சந்திரசேகர், மகளிர் விவகார அமைச்சர் சரோஜா சாவித்திரி போல்ராஜ், பாராளுமன்ற உறுப்பினர்களான க.இளங்குமரன், பவானந்தராஜா, ஜெகத் மனோகரன் ஆகியோர் பங்கேற்றிருந்தனர்.

இதன்போது இலங்கையின் கலைத்துறைக்கு இந்தியத் தரப்பின் பங்களிப்பு மற்றும் முதலீடுகள் பற்றி கலந்துரையாடப்பட்டதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது. (நி)

# அரச இசை விருது விழா

(யாழ்ப்பாணம்)

புத்தசாசன, சமய மற்றும் கலாசார அலுவல்கள் அமைச்சு, கலாசார அலுவல்கள் திணைக்களம் ஏற்பாடு செய்துள்ள அரச இசை விருது விழாவிற்கான (2025) விண்ணப்பங்கள் கோரப்பட்டுள்ளன.

இவ் அரச இசை விருது விழாவிற்கான சுற்றுநிரூபம் மற்றும் விண்ணப்பப் படிவங்களை நீங்கள் வசிக்கும் மாவட்ட மற்றும் பிரதேச செயலக கலாசாரப் பிரிவில் அல்லது கலாசார அலுவல்கள் திணைக்களத்தின் இணையத்தள முகவரி www. culturaldept.gov.lk இல் அல்லது 071 1917300 என்ற இலக்கத்திற்கு வட்ஸப் ஊடாக குறுஞ்செய்தி அனுப்புவதன் மூலம் பெற்றுக் கொள்ள முடியும். அத்துடன் ஜூன் மாதம் 30 ஆம் திகதி விண்ணப்பங்கள் ஏற்றுக் கொள்ளப்படும் இறுதித்தினமாகும். (நி-3)

## சமய அறிவுப் போட்டி

(யாழ்ப்பாணம்)

திருநெல்வேலி பத்திரகாளி அம்மன் ஆலயத்தின் வருடாந்த மகோற்சவத்தை முன்னிட்டு காளிகோவிலடி சன சமூக நிலையம் நடத்தும் சமய அறிவுப்போட்டி இம்முறையும் இடம்பெறவுள்ளது.

இப் பரீட்சைக்கு விண்ணப்பிப்பவர்கள் ஆலயத்துக்கு முன்னுள்ள அம்பாள் மல்ரி சென்ரரில் விண்ணப்பப் படிவங்களைப் பெற்றுக் கொள்ளலாம். விண்ணப்ப முடிவுத் திகதி இம்மாதம் 30 ஆம் திகதி என ஏற்பாட்டாளர்கள் அறிவித்துள்ளனர். (நி-3)



அராலி வள்ளியம்மை வித்தியாசாலைக்கு உடற்கல்வி டிப்ளோமா ஆசிரிய சங்கத்தின் தலைவர் ப.தர்மகுமாரினால் கடற்கரை கரப்பந்தாட்ட உபகரணம் வழங்கப்பட்டது.




மதுஷா





அபிராமி




விஷ்வா




வினுஷா




ரகுராம்




தருண்




நீங்கள் பார்த்த பேஸ்புக்கில் உங்களுக்குப் பிடித்தவை இருந்தால் www.facebook.com/valampuri எனும் தளத்தில் பதிவு செய்யுங்கள். அவை உங்கள் பெயர்களுடன் facebook பார்த்ததில் பிடித்தவை பகுதியில் பிரசுரமாகும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## அசைவ உணவ...

காட்சிப்படுத்தப்பட்டுள்ள விளம்பரப் பலகையில் 'Serving a vegetarian menu" எனக் குறிப்பிடப்பட்டுள்ளது.

யாழ்ப்பாணம் - நல்லூர் கந்த சுவாமி கோயில் அருகே திறக்கப்பட்டுள்ள அசைவ உணவகத்தை மூடுமாறு வலியுறுத்தி போராட்டம் முன்னெடுக்கப்பட்டிருந்ததுடன் ஆலய பக்தர்களிடம் சேகரிக்கப்பட்ட கையெழுத்துக்களடங்கிய மகஜர் யாழ்.மாநகர சபை ஆணையாளரிடம் கையளிக்கப்பட்டது.

குறித்த கையொப்பங்கள் அடங்கிய மகஜர் யாழ்.மாநகர சபை அலுவலகத்தில் வைத்து மாநகர சபை ஆணையாளர் கிருஷ்ணேந்திரனிடம் கே.கே.சிவபாலன், தவத்திரு வேலன் சுவாமிகள் உள்ளிட்ட சைவ சமய ஆர்வலர்கள் பங்கேற்புடன் கையளிக்கப்பட்டமை குறிப்பிடத்தக்கது.

(ம-7,4,33)

## போதை மாத்திரை...

யாழ்ப்பாணத்தில் 270 போதை மாத்திரைகளுடன் இரண்டு இளைஞர்கள் பொலிஸாரால் நேற்றுக் கைது செய்யப்பட்டனர்.

யாழ்.மாவட்ட குற்றத்தடுப்புப் பிரிவின் பொறுப்பதிகாரி சமன் பிரேம திலகவின் வழிநடத்தலின் கீழ் உப பொலிஸ் பரிசோதகர் நந்தகுமாரின் தலைமையில் கைது நடவடிக்கை முன்னெடுக்கப்பட்டது.

கைது செய்யப்பட்டவர்கள் 18 மற்றும் 24 வயது மதிக்கத்தக்க யாழ்ப்பாணம் மணியந்தோட்டம் பகுதியைச் சேர்ந்தவர்கள் எனத் தெரிவிக்கப்படுகிறது.

கைது செய்யப்பட்டவர்களை யாழ்ப்பாணம் நீதவான் நீதிமன்றத்தில் முற்படுத்த பொலிஸார் நடவடிக்கை எடுத்துள்ளனர். (ம-7,4,33)

## புங்குடுதீவு...

வேலணைப் பிரதேச செயலகத்திற்கு முன்பாக புங்குடுதீவு மக்களால் நேற்று முற்பகல் இந்தப் போராட்டம் முன்னெடுக்கப்பட்டது.

போராட்டத்தில் ஈடுபட்ட பொதுமக்கள், தற்போதைய நிர்வாகம் உடன் கலைக்கப்பட்டு புதிய நிர்வாகம் அமைக்கப்பட வேண்டும், கோவில் ஆன்மீகத் தலமா? வியாபார நிலையமா? கோவில் களவு போனால் முறைப்பாடு செய்வது யாரிடம், பொலிஸ் முறைப்பாட்டை தலைவர் வாபஸ் வாங்க முற்பட்டது ஏன்? தடயங்கள் திட்டமிட்டு அழிக்கப்பட்டுள்ளது, அம்மனுக்குச் சேர்ந்த கோடிக்கணக்கான ரூபாய்களை விழுங்கியது யார்? உள்ளிட்ட பல வாசகங்கள் எழுதப்பட்ட பதாகைகளை ஏந்தியிருந்தனர்.

பின்னர் போராட்டத்தில் ஈடுபட்ட பொதுமக்களால் பிரதேச செயலாளரிடம் மகஜர் ஒன்றும் கையளிக்கப்பட்டது.

இதன்போது கருத்துத் தெரிவித்த பிரதேச செயலாளர், எதிர்வரும் 29 ஆம் திகதி ஆலய நிர்வாக சபையினர் மற்றும் இன்று (நேற்று) போராட்டத்தை முன்னெடுத்த மக்களையும் அழைத்து இது தொடர்பில் கலந்துரையாடுவதாகத் தெரிவித்தார். (ம-7,4,33)

## வடக்கு, கிழக்கு...

வடக்கு மற்றும் கிழக்கு மக்கள் எதிர்கொள்ளும் காணி உரிமைப் பிரச்சினைகளைத் தீர்ப்பது தொடர்பாக பாராளுமன்றத்தின் குழு அறை 1 இல் நேற்று நடைபெற்ற கலந்துரையாடலில் கலந்துகொண்டு கருத்துத் தெரிவிக்கும்போதே பிரதமர் இவ்வாறு தெரிவித்தார்.

அவர் தொடர்ந்து தெரிவிக்கையில்,

இதுவரை காலமும் வடக்கு மற்றும் கிழக்கில் நில உரிமைப் பிரச்சினையைத் தீர்ப்பதற்கு முன்னைய அரசாங்கங்கள் மேற்கொண்ட திட்டங்கள் குறித்து பொதுமக்கள் மத்தியில் சந்தேகங்கள் எழுந்துள்ளன என்றும், காணிகளை சொந்தமாக வைத்திருப்பவர்களிடம் தங்கள் உரிமையை நிரூபிப்பதற்கான ஆவணங்கள் இல்லாத நிலை காணப்படுவதாகவும் வடக்கு, கிழக்கைப் பிரதிநிதித்துவப்படுத்தும் பாராளுமன்ற உறுப்பினர்கள் சுட்டிக்காட்டியதுடன், இதற்கு மக்களின் நம்பிக்கையை வெல்லும் முறையான வேலைத்திட்டம் தேவை என்றும் அவர்கள் தெரிவித்தனர். சில குழுக்கள் மோசடியாக நிலத்தைக் கையகப்படுத்தியுள்ளதாகவும், தற்போதைய அரசாங்கம் இந்தப் பிரச்சினைக்கு நியாயமான தீர்வை வழங்கும் என்று மக்கள் நம்பிக்கை கொண்டுள்ளதாகவும் அவர்கள் சுட்டிக்காட்டினர்.

பொதுமக்களின் சந்தேகங்களைப் போக்க முறையான வழிமுறையை அறிமுகப்படுத்தி, சட்டபூர்வ உறுதிப்படுத்தல்களுடன் மக்களுக்கு காணி உரிமை வழங்கப்பட வேண்டும் என்பதை அரசாங்கம் ஏற்றுக் கொள்கிறது என்றும் மக்களின் நிலங்களை எந்த வகையிலும் கையகப்படுத்துவதற்கு அரசாங்கத்திற்கு எந்த எண்ணமும் இல்லை என்றும் பிரதமர் கலாநிதி ஹரிணி அமரசூரிய தெரிவித்தார்.

அதன்படி மக்கள் மற்றும் சம்பந்தப்பட்ட துறைகளுடன் கலந்துரையாடிய பின்னர் எதிர்காலத்தில் ஒரு சரியான தீர்வை வழங்க அரசாங்கம் நடவடிக்கை எடுக்கும் என்று குறிப்பிட்ட பிரதமர், அதற்குத் தேவையான மேலதிக நடவடிக்கைகளை எடுக்க அதிகாரிகளுக்கு அறிவுறுத்தினார்.

விவசாயம், கால்நடை வளங்கள், காணி மற்றும் நீர்ப்பாசன அமைச்சர் கே.டி.லால் காந்த, பிரதி அமைச்சர் சுசில் ரணசிங்க, விவசாயம், கால்நடை வளங்கள், காணி மற்றும் நீர்ப்பாசன அமைச்சின் செயலாளர் டி.பி. விக்கிரமசிங்க, மேலதிக அரச தலைமை வழக்குரைஞர் விக்கும் டி அப்ரூ, பிரதமரின் செயலாளர் பிரதீப் சபுதந்திரி மற்றும் வடக்கு மற்றும் கிழக்கைச் சேர்ந்த மக்கள் பிரதிநிதிகள், காணி பதிவுத் திணைக்களம், நில அளவைத் திணைக்களம் உள்ளிட்ட அரசநிறுவனங்களைப் பிரதிநிதித்துவப்படுத்தும் அதிகாரிகள், அரசாங்க அதிபர்கள் உள்ளிட்டோர் இந்தக் கலந்துரையாடலில் பங்குபற்றினர். (ம-7,4)

## குடும்...

(வயது-63) என்ற இரண்டு பிள்ளைகளின் தந்தையே சடலமாக மீட்கப்பட்டவராவார்.

இவரது உயிரிழப்புத் தொடர்பில் மரண விசாரணைகளை திடீர் மரண விசாரணை அதிகாரி ஆ.ஜெயபாலசிங்கம் மேற்கொண்டார். (ம-7,4)

## இனப்...

துக்கு இனப்படுகொலையை ஒரு குற்றமாக அங்கீகரிப்பதற்கு கூட தைரியம் இல்லை. குற்றமாக அங்கீகரிக்கப்பட்டால் நீங்கள் சர்வதேச குற்றவியல் நீதிமன்றத்திற்குச் செல்ல நேரிடும். நீங்கள் அதனை விரும்பமாட்டீர்கள்.

இந்த அரசாங்கம் கடந்த கால அரசாங்கங்களை இனவாதிகளாக சித்தரித்து அவர்களில் இருந்து நாம் மாறுபட்டவர்கள் எனத் தெரிவிக்கின்றது.

ஆனால் அவர்களின் நடவடிக்கைகள் மாறுபட்டதாகவே உள்ளது. இலங்கையில் இனப்படுகொலை நடக்கவில்லை என்ற கருத்தை வெளிவிவகார அமைச்சர் விஜித ஹேரத் திரும்பப் பெற வேண்டும்.

அவரின் இந்தக் கருத்து மிகவும் ஆபத்தானது. இந்த நாட்டில் ஒரு சுயாதீன விசாரணையை நடத்தி நீதியை வழங்குமாறு நாம் கேட்கின்றோம்.

சர்வதேச விசாரணை மாத்திரமே சுயாதீன விசாரணையாக இருக்கும். ஏன் நீங்கள் அதில் இருந்து தப்பி ஓட முயற்சிக்கின்றீர்கள்?" எனக் கேள்வி எழுப்பியுள்ளார். (ம-7,4)


மஹஜன சம்பத
திகதி 2025.05.23
சீட்டிழுப்பு இலக்கம் 5838
C 5 1 2 8 2 8
அத சம்பத C 2 8 2 8
சீட்டிழுப்பு இலக்கம் 0413
National Lotteries Board

தன நிதானய
திகதி - 2025.05.23
சீட்டிழுப்பு இலக்கம் - 1868
L 26 27 41 74 L
Double Chance 51419

மெகா பவர்
திகதி 23/05/2025
சீட்டிழுப்பு இலக்கம் 2186
D 20 31 59 62 64

ஜய
திகதி 2025.05.23
சீட்டிழுப்பு இலக்கம் 106
R 5 6 6 2

கொவிசெத
சீட்டிழுப்பு இலக்கம் 4080
சீட்டிழுப்பு திகதி 23.05.2025
S 09 31 46 78
S

HANDAHANA
உத்தியோகபூர்வ முடிவுகள்
சீட்டிழுப்பு திகதி 2025.05.23
சீட்டிழுப்பு இலக்கம் 1147
கும்பம் 11 34 54 56 கும்பம்
21197 15

உத்தியோகபூர்வ முடிவுகள்
22.05.2025 வெற்றி வாரம் 545
A 2 2 7 7 5 3
90686
அடுத்த சுப்பர் ஜக்பொட் ரூ.37,709,133.60
DLB

SUPER BALL
சீட்டிழுப்பு வாரம் 2811
சீட்டிழுப்பு திகதி 2025.05.22 தினம் வியாழக்கிழமை
09 33 38 40 R
அடுத்த சுப்பர் ஜக்பொட் ரு.63,407,982.40

சனிதா
திகதி 22.05.2025 வெற்றி வாரம் 4972
05 42 72 73 B
அடுத்த சுப்பர் ஜக்பொட் ரு. 64,526,041.20
93524

சசிரி
வெற்றி வாரம் 687
சீட்டிழுப்பு திகதி 22.05.2025
வியாழக்கிழமை
02 16 30
வெல்லப்பட்ட மொத்தப் பரிசுத் தொகை ரூ. ரூ.200,000.00

ராசி
சீட்டிழுப்பு வாரம் 4523
சீட்டிழுப்பு திகதி 22.05.2025 தினம் வியாழக்கிழமை
03 28 36 58 துலாம்
அடுத்த சுப்பர் ஜக்பொட் ரூ.4,435,568.80
111921

கப்ருக
ஆங்கில எழுத்து, சுப்பர் இலக்கம் மற்றும் வெற்றி இலக்கம்
M 23 15 36 43 70
1987
22.05.2025 வியாழக்கிழமை
அடுத்த சுப்பர் ஜக்பொட்

அட கோடிபதி
வியாழக்கிழமை
வெற்றி வாரம் : 2637
சீட்டிழுப்பு திகதி :2025.05.22
அடுத்த சுப்பர் ஜக்பொட் ரூ.56,410,158.40
07 34 54 71 I
778519


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

"சிரஞ்சீவி"
சஞ்சிகை வெளியீட்டு விழா

நாள் :
24.05.2025, சனிக்கிழமை
காலை 9.00 மணி
இடம் :
பூரண நிலையம் – ஊரெழு கிழக்கு
ஊரெழு, பலாலி வீதி, யாழ்ப்பாணம்.
தலைமை :
திரு.ந.சுப்பிரமணியம் (ஓய்வு நிலை அதிபர்)
பிரதம விருந்தினர் :
பேராசிரியர் சி.சிறிசற்குணராஜா
(துணைவேந்தர் யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம்)
சஞ்சிகை ஆய்வு :
திரு.ந.விஜயசுந்தரம் (பிரதம ஆசிரியர் வலம்புரி நாளிதழ்)
அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்.
பூரண நிலையம், யாழ். ஊரெழு.
(4358)

Village Hotel
Bus Booking (A/C Bus)
பருத்தித்துறை → கொழும்பு
யாழ்ப்பாணம் → கொழும்பு
இரு வழிச் சேவை (பகல்/ இரவு)
நெல்லியடி → கொடிகாமம் ஊடாக
www.villagehotel.lk
077 544 8503
(3992)

வேலையாட்கள் தேவை
யாழ்ப்பாணத்தில் இயங்கும் விவசாயப் பண்ணை ஒன்றில் தங்கி நின்று வேலை செய்ய கூலி ஆட்கள் தேவை. விவசாயம், தோட்ட வேலைகளில் அனுபவமுள்ள ஆண்/ பெண் கூலியாட்கள் தேவை.
வயது : 25 – 60
076 009 15 73
(1163)

கட்டட ஒப்பந்தகாரர்களுக்கு
இந்தியா, தாய்லாந்து மற்றும் வியட்நாமிலிருந்து நேரடியாக எம்மால் இறக்குமதி செய்யப்பட்ட கொங்கிறீற் மிக்சர் (Concrete Mixer) மற்றும் இத்தாலியில் இருந்து நேரடியாக எம்மால் இறக்குமதி செய்யப்பட்ட மின்னுயர்த்தியும் (Hoist) இப்பொழுது எம்மிடம்.
(குறிப்பு - இந்தியா, தாய்லாந்து மற்றும் வியட்நாம் கொங்கிறீற் மிக்சர் (Original) வடபகுதியில் எம்மிடம் மட்டுமே. போலிகளைக் கண்டு ஏமாறாதீர்கள்)
V2 "நாங்கள் உங்களோடு"
ஆர்க் .என். கம்பனி



150, ஸ்ரான்லி வீதி, யாழ்ப்பாணம். 021 222 4021
A9 வீதி, எழுதுமட்டுவாழ். 070 191 3571
A9 வீதி, பரந்தன் சந்தி, பரந்தன். 021 228 2020
(4366)
Hotline : 071 535 7799/ 071 535 7803

Happy Supermarket - உரும்பிராய்

| | | |
|---|---|---|
| 1Kg வெள்ளைச் சீனி | - 215/= | Max 3Kg |
| 1Kg Prima கோதுமை மா | - 159/= | |
| 1Kg சிவப்பு பருப்பு | - 255/= | Max 3Kg |
| 1Kg மஞ்சள் பருப்பு | - 420/= | |
| 1Kg பொன்னி அரிசி | - 243/= | |
| 1Kg கீரி சம்பா அரிசி | - 260/= | |
| 1Kg ஈக்குத்தீட்டல் (உள்நாடு) | - 217/= | |
| 1Kg கடலை | - 390/= | |
| 1Kg வெள்ளைப்பச்சை(உள்நாடு) | - 217/= | |
| 1Kg தீட்டல் பச்சை | - 245/= | |
| 1Kg அரிசிமா | - 265/= | |
| 1Kg பால் பொன்னி அரிசி | - 265/= | |
| 750ml NewVSP நல்லெண்ணை | - 1450/= | ~~1550/=~~ |
| 01 அங்கர் யோக்கட் | - 45/= | ~~70/=~~ |
| 01 லங்கா கறிசோயா | - 115/= | ~~140/=~~ |

1040/= ~~1100/=~~ 400g Anchor
280/= ~~320/=~~ 1Kg Sunlight
தரமான பொருட்களை சிறந்த விலையில் கொள்வனவு செய்திடுங்கள். மேலதிக விலைக்கழிவு விபரங்களிற்கு Facebook:- happy basket.lk இனை நாடவும்
பலாலி வீதி, உரும்பிராய் சந்தி.
(1165)
Happy Supermarket
0777 8080 30


தேவை
சோலர் அமைப்பதற்குரிய CEB அனுமதி இருந்தால் அல்லது சோலர் அமைந்த இடம் விற்பனைக்கு இருந்தால் தொடர்பு கொள்ளவும்.
தொடர்புகளுக்கு :
077 082 1010
(4363)

வலம்புரி விளம்பரத் தொடர்புகளுக்கு
076 636 3318 | 076 097 3127

கனடா - வரி இல்லாமல்
விரைவு பொதிகள் சேவை
5-9 Kg 3970/-
11-16 Kg 2800/-
21-30 Kg 2640/-
குறைந்த விலை -நிறைந்த சேவை
கருவாடு, மருந்து வகைகள், எண்ணெய் வகைகள் அனுப்பலாம்
14 நாட்களில் Delivery
UK 11Kg - 1420/- France 11Kg - 2220/- Germany 11Kg - 2020/-
Swiss 11Kg - 2510/- Australia 11Kg - 1980/- Italy 11Kg - 2250/-
எமது நேரடி கிளைகள்
கொழும்பு, மட்டக்களப்பு, திருகோணமலை, கிளிநொச்சி, புதுக்குடியிருப்பு, கொடிகாமம், புத்தூர், சாவகச்சேரி, கோப்பாய், சுன்னாகம், யாழ்ப்பாணம் Metro Branch, சங்கானை, பண்டத்தரிப்பு, மானிப்பாய், நெல்லியடி, பருத்தித்துறை, வல்வெட்டித்துறை
V2 TRAVELS 076 822 6241 076 822 6237
(C-3026)

உடனடி வேலை வாய்ப்பு
நிர்வாக உத்தியோகத்தர்
விமானப் பயணச்சீட்டுக்கள்
விரைவுப் பொதிகள் சேவை
விசா சேவைகள்
V2 TRAVELS
எமது கிளைகள்
• கிளிநொச்சி • சுன்னாகம் • சாவகச்சேரி • மானிப்பாய் • நெல்லியடி • பருத்தித்துறை • திருகோணமலை • வல்வெட்டித்துறை • கோப்பாய் • புத்தூர் • பண்டத்தரிப்பு • சங்கானை • கொழும்பு
வயது :-30 வயதிற்குட்பட்டோர் (இருபாலாரும்)
அனுபவமுள்ளவர்களுக்கு முன்னுரிமை வழங்கப்படும்
சம்பளம் - 30'000/-
பயிற்சியின்போது - 25'000/-
0777-068-777
v2vacancies@gmail.com
(C-3026)

# மரண அறிவித்தல்



மலர்வு 18.01.1935
உதிர்வு 18.05.2025

## தம்பு பரமநாதன்

(ஓய்வு பெற்ற இராணுவ தாதி உத்தியோகத்தர், முன்னாள் யாழ். போதனா வைத்தியசாலைத் தாதி உத்தியோகத்தர்)

**(SL Army Medical Corps as a Male Nurse and Retired as Warrant officer class 1)**

புகையிரத நிலைய வீதி கோண்டாவிலைப் பிறப்பிடமாகவும் கனடாவை வசிப்பிடமாகவும் கொண்ட தம்பு பரமநாதன் அவர்கள் 18.05.2025 ஞாயிற்றுக்கிழமை அன்று காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற தம்பு - இராசம்மா தம்பதியரின் அன்பு மகனும் காலஞ்சென்ற நாகலிங்கம் - அன்னம்மா தம்பதியரின் அன்பு மருமகனும் கமலாதேவியின் அன்புக் கணவரும் இரவீந்திரன்(கனடா), இரஜினி(கோண்டாவில்), சாந்தினி(கனடா) ஆகியோரின் பாசமிகு தந்தையும் செல்வஜோதி(கனடா), பாலேந்திரன்(கோண்டாவில்) ஆகியோரின் மாமனாரும் இரவிவர்மன் - வினோதினி(கனடா), அஸ்வினி - சரண்குமார் (கனடா), தாரணி - நிஜீவன், சுபாங்கி - சஞ்ஜீவன், கஜானி, துசியந்தன், ரோகினி(கனடா), கீர்த்தனன் - சிந்துகா(கனடா), ரோஜினி(கனடா) ஆகியோரின் அன்புப் பேரனும் டிசல்லியன், ஹரிவர்சன், யஸ்வின், ஆத்மிகா, ஆருத்ரன் ஆகியோரின் அன்புப் பூட்டனுமாவார்.

அன்னாரின் இறுதிக் கிரியைகள் நாளை 25.05.2025 ஞாயிற்றுக் கிழமை கனடாவில் நடைபெறும்.

May 25th from 7 am to 9.30 am at Chapel Ridge Funeral Home located at 8911 Woodbine Avenue in Markham, Ontario.

இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளுமாறு கேட்டுக்கொள்கின்றோம்.

மகள்: +94775890862
மகன்: +14165286279
(4367)
தகவல்: குடும்பத்தினர்

இப்பத்திரிகை வலம்புரி நியூஸ் பேப்பர் (பிறைவேற்) லிமிட்ரெட் ஸ்தாபனத்தா[illegible] ... அவர்களது அச்சகத்தில் 24.05.2025 இல் அச்சிட்டு வெளியிடப்பட்டது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org